பார்த்திவ ஹூ
மார்கழி—தைமீ

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 1

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

ப்ரசுரிக்குமிடம்:

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

January, 1946
Vol. 5, No. 1

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை.	மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0—2—0	1—0—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0—12—0
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0—2—0
6.	ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7.	ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8.	ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் :—

"மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை."

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana P... ...et, Little Conjeeveram.
...d by S. V... ...St., Tyagarayanagar, Madras.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

			பக்கம்.
1,	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	... ...	2
2.	ஸ்ரீ குலசேகரப்பெருமாள் ராமாயணம்	...	6
3.	ஸ்ரீ கவிதார்க்கிக ஸிம்ஹம்	... ...	11
4.	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ப்ரஹ்ம வித்யா	...	15
5.	செய்திகள்	... ...	17
6.	ஸம்பாதகரின் குறிப்புகள்	... ...	20

ஸ்ரீ:

வியாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபனம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிருர்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமனத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிருேம்.

ஸம்பாதகர்.

பார்த்திவ ௵
மார்கழி—தை௴

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 1

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

8 JAN 1946
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

January, 1946
Vol. 5, No. 1

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்.

1,	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	2
2.	ஸ்ரீ குலசேகரப்பெருமாள் ராமாயணம் ...	6
3.	ஸ்ரீ கவிதார்க்கிக ஸிம்ஹம்	11
4.	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ப்ரஹம வித்யா ...	15
5.	செய்திகள்	17
6.	ஸம்பாதகரின் குறிப்புகள்	20

ஸ்ரீ:

வியாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபனம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிருர்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமனத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிருேம்.

ஸம்பாதகர்.



ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	பார்த்திவ ஞூ மார்கழி—தைமீ	ஸஞ்சிகை 1

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா
என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி
ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

—o—

(8721)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ வரவரமுநயே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[5-ம் அங்கம்]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருச்சி.]

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை - 12, பக்கம் - 182-ன் தொடர்ச்சி]

டம்பன்:— என்ன கர்வம்? என்ன துராக்ரஹம்? இப்படி நீ ஆசார ரம்பில் நிலையுள்ளவனாயின், என் இந்த ஸந்யாஸிப் பெண்ணை ப்ரணாமம் செய் மல் தடிபோல் நிற்கிறாய்? உலக மெல்லாம் தகப்பனைப்போல் பூஜிக்கும் என் ம், என்னுடைய தர்ம பத்நியா யிருப்பதையிட்டும், அவள் பதிவ்ரதா நியமத் யிட்டும், அடிக்கடி ப்ரஹ்மதேவர் முதலியவராலும் நமஸ்கரிக்கப்படும் க உத்தமியை ஏன் நீ அபிவாதநம் செய்யாமல் நிற்கிறாய்?

தர்ப்பன்:— தர்மத்வஜ! தற்புகழ்ச்சி செய்யும் பாதகி! பூஜ்யராகிய ன்னைப் பூஜிக்காத தோஷத்திற்காக, நீ நாய் முதலிய தாழ்ந்த யோநிகளில் றப்பாய். உலக முழுவதும் ஸஞ்சரிக்கும் நான், உன்னைப் பூஜிப்பவர் ஒருவரை ம் கண்டதில்லை. நான் எத்தனையோ ப்ரஜாபதிகள், பசுபதிகள், ப்ருஹஸ்பதி ள் முதலிய பதிகளைப் பார்த்திருக்கிறேன். அவர்களை நான் வணங்குவ தில்லை. அவர்களுக்கும் மேற்பட்டவனா?

குஹனை:— அம்மா! இந்தப் பொல்லாத ப்ராஹ்மணர் மஹர்ஷியைப் பான்ற இப்பெரியாரை நிந்திப்பதால் அவர் நரக மல்லவோ புகவேணும்?

அஸூயை:— அம்மா! தார்மிகர் பத்நியே! ஏன் உங்கள் வீட்டிற்கு வந்த அதிதியை இப்படி அவமதிக்கிறீர்கள்? ஆனால் ஒன்று சொல்வேன். ஒரு வரை யொருவர் தூஷணம் செய்யும் இவ்விருவர்களையும் நாம் மன்னித்துப் பொறுமையை விளைவிக்க வேணும்.

டம்பன்:— [கோபத்துடன்] தர்ப்பனைப் பார்த்து] நாயைப்போல் நீ ஊரெல்லாம் வீணே திரிபவன்.

தர்ப்பன்:— [கைகொட்டிச் சிரித்து] உள்ளதைப் பேசும் என்பேரில் ஏன் குரங்கைப்போல் கோபிக்கிறாய்?

டம்பன்:— அடே! பெருந் தடியனே! உனக்கு விச்வ நடவடிக்கை என்ன தெரியும்? ஒரு ஸமயம் நான் ப்ரஹ்மலோக ஸமீபத்தில் ஸஞ்சரிக்கும் போது, ஸநகர் முதலிய முனிகளோடு ப்ரஹ்மதேவர் சரேரென்று எழுந்து, விநய வணக்கத்தோடு, எழுதாம் அலம்பப்பட்ட தம் திருக்கரத்தால் எனக்கு அர்க்யம் மர்ப்பித்தார். ப்ரஹ்மதேவர் மட்டுமா? அவர் வம்சத்திற் பிறந்த எத்தனை பேர் ன் ஸ்ரீபாத தீர்த்தத்தைச் சி[illegible]ல் அபிஷேகம் செய்துகொண்டு எத்தனை மஹா பாதகங்களையும் போக்கியிருக்கிறார்கள். தெரியுமா?

[ப்ரபோத சந்த்ரோதயத்தில் [illegible]ம்பன்:- 'நான் முன்பு ஒருகால் தாமரையில் [illegible]தே ப்ரஹ்மதேவ[illegible] க்ருஹத்திற்குச [illegible]பொழுது, உடனே முனிவ ரெல்

லாம் தங்கள் உயர்ந்த ஆஸநங்களை எழுந்திருக்க, ஹ்மாவும் அ பூஜா வார்த்தைகளைப் பேசி, கோம ந்துடையை ஸோதித்துவி அத்துடையில் என்னை உட்காரச் செய்த ன்று பேசுகிறான். ப்ரபே சந்த்ரோதயம் முழுவதும் ஸ்வாமிக்கு க்லுப்த விஷ்ணு பக்தியையே லும் முத்தி தரும் வரையும் முக்ய பாத்ரமாக அமைத்துள்ள அந்த நாட தில் மிக்க ரஸமுண்டு. மற்ற கவிகள் குணங்களை ரஸத்துடன் கொண்டாடுவ மஹா கவிகளுக்கு ஒரு மஹாகுணமாகும்.]

குஹநை:— ஸ்வாமிந்! இது ஸத்யம். ஸஹதர்மசரியான நானும் இதை நேரில் பார்த்திருக்கிறேன்.

தர்ப்பன்:— [மனத்திற்குள்] இனி யென்ன ஸந்தேஹம்? இவர் ந டம்பரேதான். இவள் குஹநையே. இத்தனை அதிப்ரஸங்கம் வேறு யார்தான் செய்யக்கூடும்? [ப்ரகாசமாய்] உலகத்தை யெல்லாம் அறிந்த பெண்மணியே! நான் ஒரு ந்யாயமான ஸங்கதியை விஜ்ஞாபநம் செய்கிறேன். அதைச் செவியு வேணும். பிறர் பொருளை அபஹரிப்பதில் நிபுணியான குஹநாதேவிதான் நீ பசு ஹிம்ஸை மட்டும் மிஞ்சுவதான, யஜ்ஞ மென்று பேர்மட்டு முள்ள யாக களைச் செய்யும் ஸாக்ஷாத் டம்பர்தானே இவர்!

டம்பர்:— [மனத்திற்குள் சிரிப்புடன்] நானும் ஊஹத்தால் நீங்க யாரென்று தீர்மானிக்கிறேன். குண ச்ரேஷ்டரைத் தூஷிப்பவனும் இரைச் போடுபவனுமான தர்ப்ப னல்லவோ நீ! துறவி வேடம் பூண்ட இவள் உ பார்யையான அஸூயை தானே!

[டம்பனும் தர்ப்பனும் பரஸ்பரம் அஞ்ஜலி செய்துகொள்ளுகிறார்கள் குஹநையும் அஸூயையும் தழுவிக்கொள்ளுகிறார்கள்.]

டம்பனும் தர்ப்பனும்:— நல்ல வேளை நாம் சேர்ந்துகொண்டோ ஸமயம் பார்த்து மஹாமோஹ மஹாராஜரைப் பார்ப்போம்.

[மஹாமோஹரும் துர்மதி தேவியும் வருகிறார்கள்.]

மஹாமோஹர்:—விவேகன் மஹா ஸாஹஸிகன். அவன் மநஸ் என்ற பிதாவினிடம், தானும் நாமும் எல்லோரும் பிறந்த குலத்தையே அடியே அழிப்பவன். அவன் மநோரதத்தைத் தடுக்க நான் ஜீவனை (புருஷனை) ஸமாதி எறுமல் கலைப்பதற்காகக் காமன் க்ரோதன் முதலியவர்களை அனு னேன். அவர்கள் யத்நம் பலிக்காமல், அவர்கள் ஸேனை வ்யூஹம் கலை திரும்பி ஓடிவந்து என்னைப் பார்க்க வெட்கப்பட்டுக்கொண்டு திக்குத் திக்கா பிரிந்துபோய்ப் பட்டினி கிடந்து சாவதென்று நிராசரா யிருப்பதாகக் கேள் படுகிறேன். தேவி! அவர்கள் ப்ரியபத்நிகளான ரதி, ஜிகாம்ஸை (கொல்வதற இச்சை), த்ருஷ்ணை ஆகிய என் மந்த்ரிமார்கள் மூவரையும் ஆச்வாஸநம் செ யும்படி நீ அனுப்பவேணும்.

துர்மதி:— ஆர்ய புத்ரரே! முன்பே நான் அவர்களை அனுப்பி விட்டே அவர்கள் தங்கள் பர்த்தாக்களோடு கூடிவிட்டார்கள்.

மஹாமோஹர்:— தேவீ! நல்லது. என் பத்நி ஸ்தாநத்திற்குத் தக்கபடி ...சய்தது ரொம்ப நல்லது. போர் வரும்போது காமன் முதலியவர் கூப்பிட்டவுடனே தைர்யமாக வரவேணும். [மிகுந்த துக்கத்துடன்] எனக்கு ஒரு விதத்திலும் இணையில்லாதவனும் துராத்மாவுமான விவேகனை ஒரு பொருட்டாக ...கித்து, அவனோடு போர் நேருவதே எனக்குப் பிடிக்கவில்லை. எப்படி நீ ஸ்த்ரீகளில் ஒப்பார் மிக்கார் அற்றவளோ, அப்படியே புருஷர்களுக்குள் நானும் ஒப்பிலி. ஸுராஸுரக் கூட்டங்கள் ஸர்வ காலமும் தங்கள் தலையில் என்னுடைய ஆஜ்ஞா பத்ரிகையைத் தரிக்கிறார்கள் என்பதை, அவர்கள் ரத்ந கிரீடங்களில் ப்ரதிபலிக்கும் அப்பத்ரிகையின் எழுத்துக்களை ஒக்கும் ரத்ந காந்திகளால் காணலாம. சிவப்பு ரத்ந காந்திகளில் சிவப்பு மசி எழுத்துக்கள். நீல ரத்ந காந்திகளில் நீல மை யெழுத்துக்கள்.

> “ [illegible] யதா நியமிதः க்ஷோணீப்ருதः கிம் புந:
> [illegible] நிஹிதா [illegible] யதா [illegible] ।
> [illegible]
> [illegible] கஸ்ய வஶே க ஏஷ ந [illegible] கிம் கஸ்ய வா கத்யதே ॥”

...தவகண மெல்லாம் என் நியமநத்திற்கு உள்ளடங்கியது. அரசர்களைப்பற்றிச் சொல்லவேணுமோ? தாமரையிலும் ஸமுத்ரத்திலும் மலையிலும் த்ரிமூர்த்திகளை ...வைத்திருக்கிறேன். உலகத்தையே ஆக்கவும் அழிக்கவும் மாற்றவும் என் ...வ நொடிப்பே போதுமானது. அதன் ஆஜ்ஞையை ஒருவரும் மீறுவதில்லை. இத்தகைய பெருமை படைத்த நான் யாருக்கு உட்பட்டவனாவேன்? எனக்கு உட்படாதவர் எவர்தான் உண்டு? இது விஷயத்தில் யாரிடம்தான் என்னதான் செய்யக் கிடக்கிறது?

தேவீ! காமன் முதலிய நம் போர்வீரர்கள், ஸூர்ய ரச்மிகள் மேகங்களைச் சற்று மறைப்பன போல், ஸ்வல்ப காலம் மறைந்து ஒளிந்தால் என்ன? உலகத்திலுள்ள வஸ்துக்களை யெல்லாம்பற்றி, பேதம் அபேதம் ஸத்வம் அஸத்வம் முதலியவற்றின் விஷயமாக விபரீதமான மதங்களை ஏற்படுத்தி மோஹத்தைப் பெருக்குகிறேன். அஹங்காரத்திற்கு நன்கு பொருந்தியதும், முதல் ப்ரமாணமான ப்ரத்யக்ஷத்தையே முக்யமாகப் பாராட்டுவதும், புலன்களுக்குப் புலப்படாத பொருள்களைக் கற்பிப்ப தென்கிற வீண் ச்ரமமே யில்லாததும், அர்த்தம் காமமென்று எல்லோர்க்கும் அநுபவ ஸித்தமான இரண்டு புருஷார்த்தங்களையே போற்றுவதுமான, பொய்யே கலவாத ஒரு மெய் ஸித்தாந்தத்தைப் பரவச்செய்து, விவேகன் உத்ஸாஹத்தை யெல்லாம் வீணாகச் செய்துவிடுகிறேன்.

> “ [illegible] ந [illegible] தத்த்வாநி [illegible]
> [illegible] பவதி [illegible] நியத: ।
> [illegible] கிம் [illegible] ஸர்வம்
> [illegible] ॥”

மண், ஜலம், எரி, காற்று, ஆகிய நான்கு பூதங்கள் தத்வம். இப்பூதங்கள் ஒன்றுகூடிச் சேர்கையில் சைதந்ய மென்னும் அறிவுசக்தி உண்டாகிறது. சில பொருள்களைச் சேர்க்கையில் மத சக்தியுண்டாவதுபோல. இப்பூதங்களைக் காட்டிலும் வேறான ஆத்மா என்று பிறர் சொல்லும் வஸ்து ஒன்றை உடம்பிற்குள் யாரேனும் எப்பொழுதேனும் கண்ட துண்டோ? இருந்தால் ஒருவர் கண்ணிலும் ஒருக்காலும் புலப்படாமல் இருக்குமோ? [அநுபலப்தி அபாவம் என்னும் ப்ரமாணத்தைக் கவனிக்கவேணும். 'காணப்படவில்லை' யென்பதால் தேஹத்திலும் வேறான ஆத்மாவென்று ஒரு பொருள் தேஹத்திற்குள் இல்லையென்றே நிச்சயமாகிறது.] உடம்பு அழிந்தபிறகு என்ன ஸுகம் யாருக்கு இருக்கக் கூடும்? இப்படி ப்ருஹஸ்பதி 'லோகாயத' மென்னும் சார்வாக மதத்தை அழகாக அமைத்தருளினார். 'லோகாயதம்' என்பதற்கு, உலக மெங்கும் விஸ்தாரமாய்ப் பரவி அநுஷ்டாநத்திலிருப்பதென்று பொருள். இந்தக் கொள்கைகள் தானே உலகத்தாரால் பெரும்பான்மையாக ஆசரிக்கப்பட்டு வருகின்றன. தேஹத்திலேயே ஆத்மபுத்தி செய்வது உலக மெங்கும் வழக்கமே. அதை மீறுவது துர்லபமே. அதுவே எல்லோர்க்கும் எப்பொழுதும் ஸஹஜ மென்பது ப்ரஸித்தம். 'சாருவாகம்' என்றால் 'அழகிய வார்த்தை' என்று பொருள். அழகிய வார்த்தைகளை உரைப்பவர் சார்வாகர்; அவர் ம[illegible]ர்வாக மதம். சாருவாகமானது சார்வாக மாயிற்று என்பர் புத்தியில் மிகச் சிறந்த ப்ருஹஸ்பதி. புத்தியை மட்டும் கொண்டு யுக்தி வாதத்தில் இறங்கினால், நாஸ்திகம்தான் கைக்கொள்ள வரும். ப்ரபோத சந்த்ரோதயத்தில் மஹாமோஹன்,

> " ஹம்ஹொ வயம் தத்வதெதா யதி வபுர்நஸ்ஹி நாதிதொ வக்ஷணாம்
> த்ரஷ்: கிம் வர்ணாச்ரமவிதயிதெஜீவ: வ்யயக்ஷெணவி "

என்று பேசுகிறான். இதென்ன விந்தை! உடம்பைச் சோதித்து (ஆபரேஷன் செய்து) பார்க்கட்டுமே. அதற்குள் பூதங்களின் சேர்க்கைக்கு மேல் ஆத்மாவென்னும் ஓர் அதிகப் பொருள் எவரேனும் காட்ட முடியுமா? [எவரேனும் கண்ட துண்டோ? என்பது கருத்து.]

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

[பார்த்திவ ஸூ தை மீ]

1உ	திங்கட்கிழமை	—	மகர சுக்ல த்வாதசி திதி; ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி (வ்ரதம்); ஸங்க்ராந்திப் பண்டிகை: உத்தராயண புண்ய காலம்
7உ	ஞாயிற்றுக்கிழமை	—	ஸ்ரீ திருமழிசைப் பிரான் திருநக்ஷத்ரம்
10உ	புதன்கிழமை	—	ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்
16உ	செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ ஏகாதசி வ்ரதம்
19உ	வெள்ளிக்கிழமை	—	ஸர்வ அமாவாஸ்யை
26உ	வெள்ளிக்கிழமை	—	ரதஸப்தமி
29உ	திங்கட்கிழமை	—	மகர சுக்ல தசமி திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ குலசேகரப் பெருமாள் ராமாயணம்

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 12, பக்கம் 196-ன் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. ஓரகடம் கோ. ஸுந்தர்ஶநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், சைதாப்பேட்டை]

3. செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச்
சினவிடையோன் சிலையிறுத்து மழுவா ளேந்தி
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றி கொண்டு
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன் தன்னை
தெவ்வரஞ்சு நெடும்புரிசை யுயர்ந்த பாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எவ்வரிவெஞ் சிலைத்தடக்கை யிராமன் தன்னை
இறைஞ்சுவா ரிணையடியே யிறைஞ்சி னேனே.

[இப்பாட்டால் ஸ்ரீ ஸீதாகல்யாணம், பரசுராம கர்வபங்கம்—இவை சொல்லப்படுகின்றன]

[பதவுரை] செவ்வரி- (உத்தம லக்ஷணமான) சிவந்த ரேகைகள் படர்ந்த, நல்—அழகிய, கரு - கருமையான, நெடு கண் - (காதளவும்) நீண்ட கண்களையுடைய, சீதைக்காகி - ஸீதையை மணம் செய்துகொள்ளும்பொருட்டு, சினம் விடையோன் - கோபத்தையுடைய ரிஷபத்தை வாகனமாகவுடைய சிவபெருமானது, சிலை இறுத்து - வில்லை (எளிதில்) முறித்து, — (பின்பு மிதிலாபுரியினின்று மீளும் வழியில்), மழு வாள்—கோடாலியாகிய ஆயுதத்தை, ஏந்தி - ஏந்தியவனை பரசுராமாழ்வானுடைய, வெவ்வரி-கொடுமையான கட்டமைந்த, நல் - ச்லாக்யமான, சிலை வாங்கி - வில்லைக் கையிற்கொண்டு வளைத்து, வென்றி கொண்டு - அவனை ஜயித்து, வேல் வேந்தர் - வேலை ஏந்திய (தனது குலத்தினரான) அரசர்களது, பகை தடிந்த - விரோதி நிரஸநம் செய்தருளின, வீரன் தன்னை - மஹா வீரனை, தெவ்வர் அஞ்சு - பகைவர்கள் கண்டு அஞ்சும்படியான, நெடும் புரிசை - உயர்ந்த மதிலையும், உயர்ந்த பாங்கர் - உயர்வான மேல்மாடங்களையுமுடைய, தில்லை நகர் திருச்சித்ரகூடம் தன்னுள் - தில்லைத் திருச்சித்ரகூடத்தில், எவ்வரு - (வேறொருவரால் அடக்கியாள) முடியாததும், வெம் சிலை - கொடியவில்லை (ஏந்தியதுமான), தடம் கை - பெரிய கையையுடைய, இராமன் தன்னை - ஸ்ரீ ராமபிரானை, இறைஞ்சுவார் - வணங்குகிற அடியார்களுடைய, இணை அடியே - இரண்டு திருவடிகளையே, இறைஞ்சினேன் - வணங்கினேன்.

[கருத்து] உத்தம லக்ஷணங்கள் அமைந்த ஸீதாதேவியை மணம் செய்துகொள்ளும்பொருட்டு, வெள்ள மெடுத்தவன் (கங்காதரன்) வில்லை முறித்துப் பிராட்டியை மணம் புரிந்துகொண்டு அயோத்திக்கு வரும் வழியிலே வழி மறித்த பரசுராமனைத் தன் வில்லாற்றலால் வென்று, அரசர்களிடம் அப்பரசுராமன் கொண்டிருந்த விரோதத்தை ஒழித்து, தில்லை திருச்சித்ரகூடத்தில் எழுந்தருளியிருக்கும் மஹாவீரனை ஸ்ரீராமபிரானைத் தொழும் அடியார்களுடைய திருவடிகளைத் தொழுதேன் என்கிறார்.

[விசேட உரை] ஜநகராஜன், தன் குலத்துப் பூர்வீக ராஜனான தேவராதனிடம் சிவபிரானால் வைக்கப்பட்டிருந்ததொரு பெரிய வில்லை எடுத்து வளைத்தவனுக்கே தன் மகளான ஸீதையைக் கல்யாணம் செய்துகொடுப்பதென்று கந்யாசுல்கம் வைத்திருந்தான். வேள்வி முடித்த விச்வாமித்ரனுடன் மிதிலைக்குச் சென்ற ஸ்ரீராமபிரான், அவ்வில்லை எடுத்து வளைக்கத் தொடங்குகையில் அது முறிந்திட, அதனால் ஜநகன் ஸ்ரீராமபிரானது ஆற்றலைக் கண்டு மகிழ்ந்து ஸீதையை ராமனுக்கு மணம் செய்யலாயினன் என்பதும்;

மணம் முடித்துக்கொண்டு தசரத சக்ரவர்த்தி தன் திருக் குமாரர்களுடனே அயோத்திக்கு மீண்டும் வருகையில், பரசுராமன் வலியச் சென்று, "என் வில் வலி கண்டு போ" என்று எதிர்வந்து வீரவாதம் பேசித் தன் வில்லை ராமபிரானிடம் கொடுக்க, அவன் உடனே அதனை வாங்கி எளிதில் வளைத்து நாணேற்றிக் கணைதொடுத்து, "இவ்வம்புக்கு இலக்கு என்?" என்று வினவ, அப்பரசுராமன் தன் தபோபலம் முழுவதையும் அதற்கு இலக்காகக் கொடுக்க, ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் அதனை ஆகர்ஷித்துக்கொண்டு அவனைக் கொல்லாமல் விட்டருளினன் என்பதும் இப்பாசுரத்தில் ப்ரபாதிக்கப்பட்டுள்ள விஷயங்கள்.

செவ்வரி நற் கருநெடுங் கண்—"அஸிதேக்ஷண." கரியவாகிப் புடைபெயர்ந்து மிளிர்ந்து செவ்வரி யோடிய நீண்ட பெரியவாய கண்கள். கண்களுக்குச் செவ்வரி படர்தலும், பரந்திருத்தலும், கருமையுடைமையும், காதளவும் நீண்டிருத்தலும் உத்தம விலக்கணம். கண்களின் அழகு, மற்றை அங்கங்களின் அழகுக்கும் உபலக்ஷணம்.

விடையோன்—வ்ருஷபத்தை வாஹநமாகவுடைய சிவபெருமான். ருத்ரனுதலின் இவன் "சின விடையோன்" எனப்பட்டான். ஏந்தி ஏந்தியவன்; இ—பெயர் விகுதி. தெவ்- பகைமை; (உரிச்சொல்). அதனையுடையவர் தெவ்வர்.

எவ்வரு வெஞ்சிலைத் தடக்கை இராமன்— "ஸவஷஹ்ரஹஸநு:". வேறொருத்தரால் அடக்கியாள வொண்ணாது ப்ரதிபக்ஷம் முடியும்படியான ஸார்ங்கத்தையுடைய ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன். நேரொருவ ரில்லா வில்லி.

'இராமன் தன்னை இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேன்— இது ஸ்ரீபரதாழ்வான் குணங்களுக்குத் தோற்ற ஸத்ருக்நாழ்வான் படி.

4. தொத்தலர்பூஞ் சுரிகுழற்கை கேசி சொல்லால்
தொன்னகரந் துறந்துதுறைக் கங்கை தன்னைப்
பத்தியுடைக் குகன்கடத்த வனம்போய்ப் புக்குப்
பரதனுக்குப் பாதுகமு மரசு மீந்து
சித்திரகூ டத்திருந்தான் தன்னை யின்று
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எத்தனையுங் கண்குளிரக் காணப் பெற்ற
இருநிலத்தார்க் கிமையவர்நே ரொவ்வார் தாமே.

[இப்பாட்டால், ஸ்ரீராமபிரானுடைய வநவாஸம்; குஹ ஸக்யம்; பாதுகா பட்டாபிஷேகம்; சித்ரகூட கமநம்—இவை சொல்லப்படுகின்றன]

[பதவுரை] தொத்து அலர் - கொத்துக் கொத்தாக மலர்கின்ற, பூ - புஷ்பங்களைத் தரித்த, சுரி குழல் - சுருண்ட கூந்தலையுடைய, கைகேசி சொல்லால் - கைகேயியினது சொல்லின்படி, தொல் நகரம் - (முன்னோர் தொடங்கிப்) பழமையாக வருகிற அயோத்யா நகரத்தை, துறந்து - கைவிட்டு, கங்கை துறை தன்னை - கங்கைத் துறையை, பத்தி உடை- (தன்னிடம் மிக்க) பக்தியுள்ள, குகன் கடத்த - குகன் (தன் ஓடத்தின் உதவியைக் கொண்டு) தாண்டுவிக்க, வனம் போய் புக்கு - காட்டிற் போய்ச் சேர்ந்து, பரதனுக்கு - ஸ்ரீ பரதாழ்வானுக்கு, பாதுகமும் - (தனது) திருவடி நிலைகளையும், அரசும் ஈந்து - ராஜ்ய பாரத்தையும் கொடுத்து, சித்ரகூடத்து - திருச்சித்ரகூடத்திலே, இருந்தான் தன்னை - எழுந்தருளியிருந்த ஸ்ரீ ராமபிரானை, இன்று - இப்பொழுது (பிற்காலத்தில்), தில்லை நகர் திருச்சித்ர கூடம் தன்னுள் - தில்லைத் திருச்சித்ரகூடத்தில், கண் குளிர காணப்பெற்ற - கண்கள் குளிரும்படி கண்டு அநுபவிக்கப்பெற்ற, இரு நிலத்தார்க்கு - சிறந்த பூலோகத்தில் உள்ளவர்களுக்கு, இமையவர் - பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளும், எத்தனையும் நேர் ஒவ்வார் - சிறிதும் ஸமமாகமாட்டார்.

[கருத்து] கைகேயியின் சொல்லை யேற்று, நாட்டை விட்டுக் குஹப்பெருமான் உதவியால் கங்கையைக் கடந்து காட்டை யடைந்து, சித்ரகூட பர்வதம் சேர்ந்த வளவி

லே, அங்கே தன்னை அழைத்துப்போக வந்த தன் தம்பியான பரதாழ்வானுக்குத் தன் திருவடி நிலைகளையும் அரசாட்சியும் தந்தருளிய ஸ்ரீ ராமபிரானைத் தில்லைத் திருச்சித்ர கூடத்திலே ஸேவித்த நில உலகத்தார் நித்ய ஸூரிகளைக் காட்டிலும் தந்யர்க ளென்கிறார்.

[விசேட உரை] ஸீதா கல்யாணத்தின் பிறகு தசரதர் ராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் செய்ய யத்நம் செய்தார். அப்போது மந்தரை சூழ்ச்சியால் மனங் கலங்கிய கைகேயி தன் கணவரான தசரதரிடம், முன்பு அவர் தனக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்களுள், ஒன்றால் தன் மகன் பரதன் நாடாளவும், மற்றொன்றால் இராமன் பதினான்கு வர்ஷம் வனம் செல்லவும் வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டாள். சக்ரவர்த்தி ஸத்யஸந்த ராதலால் அச்சொல்லைத் தட்ட முடியாமலும், இராமன் மீதுள்ள அன்பு மிகுதியால் வாய் திறந்து சொல்லமாட்டாமலும் வாளாவிருக்க, கைகேயி இராமனை வரவழைத்து, "அப்பா! உன் தந்தை பரதனுக்கு நாடுகொடுத்து உன்னைப் பதினான்கு வர்ஷம் காடேறப் போகச் சொல்லுகிறார்" என்று பணிக்க, அச்சொல்லைச் சிரமேற்கொண்ட அப்பிரான், "அம்மா! மன்னவன் பணி யன்றாகில் நும்பணி மறுப்பனோ யான், என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?" என்று நெஞ்சுருகப் பணிந்து கூறி, தக்ஷணமே ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் வநவாஸம் செய்யப் புறப்பட்டு, குஹனோடு நட்புக்கொண்டு, அவன் உதவியால் கங்கையைக் கடந்து சித்ரகூடம் சார்ந்தான். இதற்குள் அயோத்தியில் தசரதர் உயிர் துறக்கப் பரதன் அச்செய்தியை அறிந்து அயோத்தியை அடைந்து, தந்தைக்குச் செய்யவேண்டிய சரமக்ரியைகளைச் செய்துமுடித்து, வஸிஷ்டர் முதலானோரோடும் தாய்மாரோடும் சித்ரகூட மடைந்து, இராமனை மீண்டும் அயோத்திக்கு வந்து பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்படி ப்ரார்த்திக்க, இராமபிரான் அவன் வேண்டுகோட்கு இணங்காது தன் திருவடி நிலைகளை அருள, பரதன் அந்நிலைகளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு இராம னில்லாத அயோத்தியில் புக இசையாதவனாய், அதனை அடுத்த நந்திக்ராமத்தி லிருந்துகொண்டு இராமனுடைய பாதுகைகளுக்கு முடிசூட்டி ராஜாங்க கைங்கர்யங்களைப் புரிந்துகொண்டிருந்தான் என்பது இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட வரலாறு.

கோத்தலர்ந்த சுரிகுழல் கைகேசி—கொத்துக் கொத்தாக அலர்கின்ற பூக்களையுடைய சுருண்ட அழகியதான குழலையுடைய கைகேசி. இச்சொற்றொடர், கைகேயி தனது செயற்கை அழகினாலும் இயற்கை அழகினாலும் தன் கணவனைத் தான் சொன்னபடி கேட்டொழுகும்படி வசப்படுத்தியவள் என்பதைத் தெரிவிக்கும்.

குஹன்—கங்கை யிரு கரையை யுடையவனும், கணக்கிறந்த நாவாய்களை [ஓடங்களை] யுடையவனும், சிருங்கிபேர புரத்துக்குத் தலைவனுமாகிய ஒரு வேடர்கோன். இராமபிரானின் உயிர்த் துணைவன்.

பத்தியுடைக் குஹன்:— இவன் பெருமாளின் தம்பிமாரைக்காட்டிலும் பெருமாளிடம் மிக்க ஸ்நேஹந்தை யுடையவன்; விச்லேஷாஸஹ்யன்; பெருமாள் நியமிக்கக் காட்டுக்கு உடன் செல்லாமல் நின்றவன்.

பரதன்— ராஜ்யபாரத்தை நிர்வஹிக்க வல்லவன். இராமபிரானுடைய அடுத்த தம்பி. இராமபிரான் வநவாஸம் செல்ல, தசரதன் ஸ்வர்க்கம் புக, அரச னில்லாதிருந்த ராஜ்யத்தை இவன் பாதுகாக்கும்படி நேரிடுவதை ஞானக்கண்ணால் அறிந்து வஸிஷ்டர் இவனுக்கு இத்திருநாம மிட்டனர்.

"சித்திரகூடத் திருந்தான் தன்னை இன்று தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள் கண்குளிரக் காணப்பெற்ற" — இச்சொற்றொடர், "ராமாவதாரத்திலே சித்ரகூடபர்வதத்தில் எழுந்தருளியிருந்த இருப்பை அப்போதுள்ளார் பார்த்து அநுபவிக்கப் பெற்றாரே யன்றி, பின்புள்ளார் நேரிற் கண்டு அநுபவிக்க இயலாதுபோனதால், அக்குறை தீர இனி எல்லாக் காலத்திலும் எல்லாரும் அநுபவிக்கைக்காகத் தில்லைநகர்த் திருச்சித்திரகூடத்தில் விற்றிருந்த திருக்கோலமாக எழுந்தருளியிருப்பவன்" என்று பொருள்படும்.

பரமபதத்தில் எம்பெருமானைத் தர்சிப்பதற்கு ப்ரதிபந்தக மொன்றும் இல்லாமையாலே 'ஸதாவபஶ்யந்தி' என்று அங்கு அவனைக் கண்டு ஆனந்தித்தலையே பொழுது போக்காக வுடைய நித்யஸூரிகளைக் காட்டிலும், அக்காட்சிக்குத் தடையான வேறு விஷயங்கள் பலவற்றையுமுடைய இவ்வுலகத்திலேயே அவற்றை யெல்லாம் விட்டு எம்பெருமானைக் காண்கின்றவர் மேம்பட்டவ ரென்பது, 'இருநிலத்தார்க்கு இமையவர் நேரோவ்வார்' என்பதன் கருத்து.

5. வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக் கொன்று
வண்டமிழ்மா முனிகொடுத்த வரிவில் வாங்கி
கலைவணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக்
கரனோடு தூடணன்தன் னுயிரை வாங்கிச்
சிலைவணக்கி மான்மறிய வெய்தான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
தலைவணக்கிக் கைகூப்பி யேத்த வல்லார்
திரிதலால் தவமுடைத்துத் தரணி தானே.

[இப்பாட்டால் விராதவதம், அகஸ்த்யாச்ரம கமநம், சூர்ப்பணகா பங்கம், கரதூஷண வதம், மாரீச வதம்—இவை சொல்லப்படுகின்றன.]

[பதவுரை] வலி வணக்கு - (பகைவர்களுடைய) வலிமையைத் தோற்பிக்கின்ற, வரை நெடு தோள் - மலைபோன்ற பெரிய தோள்களையுடைய, விராதை கொன்று - விராதனென்னும் அரக்கனை ஸம்ஹரித்து, வண் - பொருள் வளமுள்ள, தமிழ் - தமிழ்மொழிக்கு இலக்கண வரையறை செய்த, மா முனி - ச்ரேஷ்டரான அகஸ்த்ய முனிவர், கொடுத்த - கொடுத்தருளிய, வரி வில் வாங்கி - கட்டமைந்த வில்லைப் பெற்று, கலை வணக்கு - மானின் பார்வையைத் தோற்பிக்கும்படியான, நோக்கு - பார்வை யழகுடையவளாய் வந்த, அரக்கி மூக்கை நீக்கி - சூர்ப்பணகையினுடைய மூக்கை அறுத்து, கரனோடு தூடணன் தன் - கரதூஷணர்களுடைய, உயிரை வாங்கி - ப்ராணனை முடித்து, மான் மறிய - மாயமான் வடிவு கொண்டுவந்த மாரீசன் அழியும்படி, சிலை வணக்கி - தன் வில்லை வளைத்து, எய்தான் தன்னை - அம்பெய்தவனை ராமபிரானை, தில்லைநகர் திருச்சித்ரகூடம் தன்னுள் - தில்லைத் திருச்சித்ர கூடத்திலே, தலை வணக்கி - தலை நிலந் தோயக் குனிந்து, கைகூப்பி ஏத்த வல்லார் - அஞ்ஜலி செய்து துதிக்கவல்ல அடியார்கள், திரிதலால்- (தன்மீது) ஸஞ்சாரம் பண்ணுதலால், தரணி தவம் உடைத்து - பூமியானது பாக்யத்தை உடையது.

[கருத்து] விராதனை வதைத்து, அகஸ்த்ய முனிவர் கொடுத்தருளிய வில்லைப் பெற்று, சூர்ப்பணகையின் மூக்கை அரிந்து, கர தூஷணாதியரை ஸம்ஹரித்து, மாயமான் வடிவு கொண்டுவந்த மாரீசனைக் கொன்ற பெருமானைத் தில்லைத் திருச்சித்ரகூடத்தில் ஸேவித்த பாகவதோத்தமர்கள் ஸஞ்சாரம் பண்ணுதலால் இப்பூமி மஹா பாக்யமுடையது என்றபடி.

[விசேட உரை] விராதன் என்னும் சொல், மிகுதியாய் அபராதம் செய்பவன் எனப் பொருள்படும். இவன் தும்புரு என்னும் கந்தர்வனாயிருந்து, பின்பு குபேரன் சாபத்தால் ராக்ஷஸனாகி வனத்தில் திரிந்துகொண்டிருந்தான். ராம லக்ஷ்மணர் ஸீதையோடு தண்டகாரண்யம் செல்லுகையில், இவ்வரக்கன் வந்து ஸீதையைத் தூக்கிச் செல்ல, ராம லக்ஷ்மணர் கண்டு அவனை எதிர்க்க, அவன் பிராட்டியை விட்டு அவர்களைத் தூக்கிக் கொண்டு செல்ல, இராம லக்ஷ்மணர் அவன் தோள்களை வெட்டிக் கொல்லும்போது, அவன் அவர்களுக்குத் தனது பிறப்பு வரலாற்றை உணர்த்திக் கேட்டுக்கொண்டபடியே பள்ளந் தோண்டி அவன் உடம்பைப் புதைத்துச் சென்றனர் என்பதும்;

இராமபிரான் பரசுராமனிடமிருந்து விஷ்ணு தநுஸ்ஸைப் பெற்று அதை வருண னிடம் கொடுத்துச் சேமித்து வைத்திருக்கும்படி நியமிக்க, வருணன் அதைப் பத்ரமாகச் சேமித்து வைத்திருந்து, ராமபிரான் தண்டகாவநத்தில் அகஸ்த்யாச்ரமத்துக்கு எழுந்தரு ளும்போது கரதூஷண வதத்திற்கு உபயோகமாகுமாறு அவ்வில்லைக் கொணர்ந்து, அகஸ்த்ய முனிவரிடம் கொடுக்க, அம்முனிவர் அவ்வாயுதத்தை ஸ்ரீ ராமபிரானிடம் தர, அவன் அதைப் பெற்றுக் கொண்டனன் என்பதும்;

ஸ்ரீராம லக்ஷமணர் தண்டகாரண்யத்தில், பஞ்சவடியில் எழுந்தருளி யிருந்தபோது, ராவணன் தங்கையான சூர்ப்பணகை ராம லக்ஷமணரை அணுகித் தன்னை மணம் செய்து கொள்ளும்படி அவர்களைத் தனித்தனி வேண்ட, அவர்கள் உடன்படாது மறுக்கவே, ஸீதையை அகற்றிவிட்டால் தன்னை ராமன் மணம் புரிதல் கூடுமென நிச்சயித்து அவள் பிராட்டியைத் தூக்கிச் செல்ல முயன்றபோது, லக்ஷமணன் கண்டு ஓடிவந்து சூர்ப்பண கையின் காது மூக்கு முதலிய அவயவங்களை அறுத்துவிட்டனன் என்பதும்;

மூக் கறுபட்ட சூர்ப்பணகை இச்செய்தியைக் கரன் தூஷணன் முதலியோரிடம் முறையிட்டுத் தெரிவிக்க, கரதூஷணாதியர் பதினாலாயிரவர் மிகவும் சினந்து போர்க்குச் சித்தமாகி வர, அஸஹாய சூரனான ஸ்ரீ ராமபிரான் தான் தன்னந்தனியனாய் அவர்களைப் போரில் கொன்று வென்றன னென்பதும்;

இராவண னேவலால் மாயமான் வடிவங் கொண்டுவந்த மாரீசனை இராமபிரான் தன் அம்பினால் கொன்றொழித்ததும் இச்செய்யுளில் விளங்கும் விஷயங்கள்.

வணக்குதல்—கீழ்ப்படுத்துதல் - வணங்குதல் என்பதன் பிறவினை.

வரை நெடுந்தோள்— மலைபோன்ற திண்ணிய தோள். வரை—கணு; அதனை யுடைய மூங்கிலுக்குச் சினை யாகுபெயராய், பின்பு அம் மூங்கில் விளையும் மலைக்குத் தானி யாகுபெயராய் வருதலால் இருமடி ஆகுபெயர். ஆயுதங்களால் அழிக்க முடியாத வலிமைக்கும் பருத்தோங்கிய வடிவிற்கும், தோள் மலைக்கு உவமையாகும்.

அகஸ்த்யர் ஆதியில் சிவபெருமானிடம் தமிழை உபதேசம் பெற்று, வடதிசையி னின்றும் தென் திசைக்கு வந்து தமிழ்ப் பாஷையைத் தழைத்தோங்கச் செய்தன ராதலால் அவர் ''வண்டமிழ் மாமுனி'' எனப்பட்டார்.

கலை வணக்கு நோக்கரக்கி— எனும் தொடர், சூர்ப்பணகை இராமபிரானிடம் வரும்போது அரக்கி வடிவத்தை நீத்து அழகிய வடிவங்கொண்டு வந்தா ளென்பதைத் தெரிவிக்கும். ''தன் சீதைக்கு நேராவ னென்றோர் நிசாசரிதான் வந்தாளே,'' ''மானின் விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்'' என்று கலியனும் கம்பரும் கூறிப் போந்தமை காண்க. மூக்கு—என்பது, அறுபட்ட மற்ற இரு அவயவங்களுக்கும் உபலக்ஷணம்.

தலைவணக்கிக் கைகூப்பி ஏத்தவல்லார் — தலை யுண்டான பயன் பெற வணங்கி, கை யுண்டான பயன் பெறத் தொழுது, வாயுண்டான பயன் பெற வாழ்த்த வல் லவர். அவர்கள் திரிதலால் தவமுடைத்துத் தரணி—இவர்களுடைய ஸஞ்சாரத்துக்கு விஷய மாகையாலே பூமியானது பாக்யத்தை உடையது என்றபடி. ''நாதனை நரசிங்கனை நவின் றேத்துவார்க ளுழக்கிய, பாததூளி படுதலாலிவ் வுலகம் பாக்யம் செய்ததே'' என் கிற பெரியாழ்வார் அருளிச்செயல் இங்கு ஒப்புநோக்கத் தக்கது. ராமபிரான் திரிதலால் பெற்ற பாக்யத்தினும், அவனடியார் திரிதலால் பெற்ற பாக்யம் விசேஷம் என்றபடி.

[தொடரும்]

18927

ஸ்ரீ:

[illegible]

கவிதார்க்கிக ஸிம்ஹம்

[ஸம்புடம் 4, ஸஞ்சிகை 12, பக்கம் 187 - ன் தொடர்ச்சி]

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவன்குடி, பெங்களூர்]

கலியுகத்தில் எம்பெருமான் அர்ச்சாரூபியாய் விளங்குகிறார். வேதம் தமிழ் வடிவெடுத்து அவரைக் கொண்டாடுகிறது. த்ரேதாயுகத்தில் பகவான் சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்தபோது, வேதம் ஸ்ரீமத் ராமாயணமாய் அவதரித்துப் பகவானை ஸ்துதித்தது. அந்த ஆதி காவ்யமாகிய ஸ்ரீமத் ராமாயணத்திற்கு ஸத்ருசம் இப்பாதுகா க்ரந்தம். என்ன ஸரஸ கவநம்! நாவுக்கினிமை; மனதுக்குக் கனிவு. '[illegible]' என்று ஸ்ரீமத் ராமாயணம் படிப்பதற்கும் பாடுவதற்கும் மதுரம். அப்படியே இக்காவ்ய ரத்நமும் விளங்குகின்றது. விஷய வைலக்ஷண்யம் அர்த்த கௌரவம் முதலியன இதில் நிறைந்து ததும்புகின்றன. எவ்வளவு அழகிய அநுப்ராஸம்! அந்வயம்தான் என்ன ஸு[illegible]லபம்! பாலும் சர்க்கரையும் சேர்ந்தாற்போல் இனிக்கும் இந்த ஒரு ச்லோகத்தைச் சுவைத்து ஆநந்திப்போம்.

" [illegible] ।
[illegible] ॥ "

[பாதுகையே! உன்னைச் சாத்திக்கொண்டு பெருமாள் ஸஞ்சரிக்கும் காலத்தில் 'கல்கல்' என்ற இனிய சப்தம் 'பரதேவதை யார் என்று ஸந்தேஹிக்க வேண்டாம்; நான் ஸகல தேவதைகளிலும் சிறந்தவள்; என்மேல் ப்ரகாசிக்கும் இந்த வாஸுதேவன் எனக்கு மேற்பட்ட பரதேவதை; எங்களைக் காட்டிலும் மேற்பட்ட தெய்வம் கிடையாது' என்ற தத்வத்தை உபதேசிக்கிறது.] இப்படி யல்லவோ ஸ்வாமி போற்றியிருக்கிறார். அதாவது: 'ஸகல தேவர்களிலும் சிறந்தவர்கள், எம்பெருமான் திருவடித் தாமரைகளில் ஆச்ரயித்த அவன் தொண்டர்கள். அவர்களுக்கு ப்ரபு ஸ்ரிய:பதி ஒருவனே. அவனைக்காட்டிலும் வேறு பரதேவதை இல்லவே இல்லை' என்பதை எவ்வளவு அழகாக உணர்த்துகிறார் நம் ஸ்வாமி.

ஸ்ரீராகவனைக் காட்டிலும் வேறு பரதேவதை கிடையாது. அவ்வெம்பெருமானுக்கு ப்ரதிநிதி அவருடைய பாதுகைகள்தான் என்று பரதாழ்வான்,

" [illegible] ।
[illegible] ॥"

[அண்ணா! தேவரீர் உறுதி அவ்விதமாகில் (அயோத்திக்கு எழுந்தருளித் திருவபிஷேகம் செய்துகொள்ளத் திருவுள்ள மில்லையாகில்) இத்திவ்ய பாதுகைகளின் மேல் ஏறி அநுக்ரஹித்தருளவேண்டும். தேவரீர் திருவடிக்கு ப்ரதிநிதியாகிய இவைகள் ஸகல லோகத்திற்கும் யோகக்ஷேமங்களைச் செய்யும் மஹிமை வாய்ந்தவை] என்று ப்ரார்த்தித்த விஷயத்தை இந்த ச்லோகம் விளக்கிக் காட்டுகிறது.

ஆம்; வாஸ்தவம்; அதிலென்ன ஸம்சயம்? '[illegible]' [வால்மீகி பகவான் வ[illegible]க்கிற்கு ஸத்ருசந்தான் என் வாக்கு] என்று

ஸ்வாமி ஆரம்பத்திலேயே அருளிச்செய்ய வில்லையா? ஆதியில் ஸ்ரீமத் ராமாயணம் சதகோடி விஸ்தாரமாயிருந்தது. அதின் ஸாரத்தை வால்மீகி பகவான் இருபத்து நாலாயிரம் ச்லோகம்கொண்ட ஸீதாசரிதமாகச் செய்தார். அதிலுள்ள ரஸத்தைப் பிழிந்தெடுத்து ஆயிரம் ச்லோக ரூபமாகச் செய்தருளினர் நம் கவிதார்க்கிக ஸிம்ஹம். வேதம் உருவில் பெரியது. உபநிஷத் அதன் ஸாரம். அது உருவில் சிறியது. அதன் அருமை பெருமைகளுக்கு ஏதாகிலும் குறைவுண்டோ? ஸ்ரீமத் ராமாயணம் சரணுகதி வேதம். பாதுகாஸஹஸ்ரம் அதன் ஸாரம். இவ்வர்த்தத்தையேதான் க்ரந்தத்தின் முடிவில்,

"ஐத்ஶும் க்ஷசெவ நிஜகெஶவஶாதகாஷீ:
ஶிக்ஷிாகூ-நாயவதவங்கஜயொர நந்யா ।
ஸீயம் வதாவநி ஜயா ஸ-ஜஹஸ்ரிதும்
ஸீதெவ தெவி ஸஹஜெந கவீஶ்வரெண ॥"

[ஓ பாதுகையே! நீயும் ஸீதாதேவியைப்போல் கருணை வடிவங் கொண்டவள். ஸூர்யனை விட்டு ப்ரபை பிரியுமா? சந்த்ரனை விட்டுக் காந்திதான் அகலுமா? அன்னை ஜாநகி சக்ரவர்த்தித்திருமகனை விட்டு இறையும் அகலகில்லள். நீயும் அவ்விதமே பெருமாள் திருவடியை விட்டு அரை க்ஷணமும் பிரியாதவள். அவள் உலகை உய்விக்கும்பொருட்டு "காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம் மஹத்" என்று, தனது எல்லையற்ற பெருமைகளைக் கவி ச்ரேஷ்டராகிய தன் ஸகோதரரைக்கொண்டு பாடச்செய்தாள். தேவி பூமியில் அவதரித்தவள். பூமிக்குக் காது புற்று. அதில் தோன்றினவர் வால்மீகிமுனிவர். ஆகவே அவர் கூடப்பிறந்தவர் ஆகிறார். நீயும் உனது மேன்மை பொருந்திய திவ்ய சரித்ரத்தை உலகம் க்ஷேமமடைவதன் பொருட்டு உன் ஸேவகனாகிய என்னைக் கொண்டு செய்வித்தாய். எல்லாம் உன் லீலை] என்று ஸ்துதி செய்திருக்கும்போது என்ன ஸந்தேஹம்? ஸம்ஸாரமாகிற பாலைவனத்தில் தவிக்கும் நமக்கு, நம் கவி ஸிம்ஹத்தின் கல்பநா நதி அம்ருத பாந மளித்துத் தாஹத்தைத் தீர்க்கும் என்பதில் ஐயமுண்டோ?

ஆமாம்; வாஸ்தவம்; பரதேவதை ஸ்ரீமந்நாராயணன். அவனை அடைக்கலம் அடைந்தால் மோக்ஷம் ஸித்தம் என்பது நன்றாய் விளங்குகிறது. ஆனால் இவ்வுலகில் கல்லானே யாகிலும் கைப்பொருளொன்று அவச்யம். மேலும், பேய் பூதம் ஜ்வரம் முதலானவைகளால் துன்பம் உண்டாகும். க்ரஹங்கள் தங்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தித் துன்புறுத்துகின்றன. அத்துன்பங்களை நிவர்த்திக்கும்பொருட்டு, மணி மந்த்ர ஔஷதங்களைச் செய்தா லல்லவோ அவை தீரும் என்று எண்ணுபவர்களுக்கும் பரிஹாரம் கூறுவதுபோல இருக்கின்றன இதில் சிற்சில ச்லோகங்கள். ஸ்ரீமத் ராமாயண பாராயணத்தினால் ஸர்வாரிஷ்டங்களும் விலகும். இஷ்ட ப்ராப்தியும் உண்டாகும். அதேபோல் இக்காவ்ய ரத்நமும் வரப்ரஸாதி. இதைப் பாராயணம் செய்பவருக்கு இது ஸகல க்ஷேமங்களையும் அளிக்கும். மேன்மேலும் ஜ்ஞாநம் வளர்ந்து பக்தி பெருகும். மந்த்ர சக்தி நிறைந்தது. இதனைச் சொற்சுவை பொருட்சுவைகள் ததும்ப அநேக ச்லோகங்களில் பளிங்குபோல் எடுத்துக் காட்டுகிறார் நம் ஸ்வாமி.

பாதுகா பக்தர்கள், நான்கு வித புருஷார்த்தங்களாகிய பலங்களை, முகுந்தனாகிய கற்பக தருவினின்று கையினால் எட்டிப் பறிக்கலாம் என்னும் ஒரு அழகான ச்லோகம் பாருங்கள்.

" ஹஸ்தாவலேபவசாத் க்ஷிதாயஸம்ருத்த்யை
த்ருஹ்யம் பதாவநி த்ருஹ்யம் ப்ரக்ருதீர் யஹஸ்வ ।
ஆயாவிஶேஷஜநிதஸ்ய க்ருதாபிஷேகா
ராஜ்ஞஸ்த்வயி ஸ்புஸமஹோ ஹிஷேக புத்தயை: ॥ "

[ஓ பாதுகையே! தேவலோகத்தில் கற்பக வ்ருக்ஷ முளது. அது வேண்டிய பலன்களைக் கொடுக்கும் என்பது ப்ரஸித்தம். ஏதோ நச்வரமான அல்ப பலன்களை அது கொடுக்கலாம். முகுந்த னென்னும் கற்பக வ்ருக்ஷமோ, அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்குவித புருஷார்த்தங்களையும் அளிக்கும் மஹிமை யுடையது. அதற்கு வேர் நீயே யன்றே? வேர் காய்ந்தால் மரம் எவ் விதம் இருக்கும்? வேரில் ஜலம் விட்டவுடன், மரம் செழித்துத் தழைத்துப் புஷ்ப மும் பழமுமாய்க் கையால் எட்டிப் பறிக்கலாம்போல் விளங்கு மல்லவா? அதே போல், உனக்குப் பரதன் அபிஷேகம் செய்தவுடன் சக்ரவர்த்தித் திருமகன் திரு வுள்ளம் குளிர்ந்தது. அந்த மரம் தன்னடியார்களுக்கு நிழலையும் ஸகல ச்ரேயஸ் ஸாதகமான பலன்களையும் கொடுத்து உதவியது] என்று ஸ்துதித்தார்.

மற்றொரு ஸந்தர்ப்பத்தில், பாதுகையின் தூள்களைப் பற்றி வர்ணித்த இந்த ச்லோகத்தைச் சுவைத்து ஆனந்திப்போம். இதை அநுஸரித்தால் பூதம் பேய் பிசாசுகள் எல்லாம் பறந்தோடும் என்பது ஸ்வாமியின் கருத்துப்போலும்.

" சுஹ்ருத்ஜநோதிஜநகாணாம்
பஹுஶோ ஹுநவேத் ஹ்ருதவாநகேஷு ।
சுவதேவஶாந்தராஜ்ஞாயம்
ரஜஸா ஶ்ரீம்வதி தாவகேந ஹேஹாது ॥ "

[ஓ பாதுகையே! உலகத்தில் குழந்தைகளுக்குப் பேய் பிடித்தால் விபூதி மந்திரித்து, அதனைக் கை கால் கழுத்து முதலிய விடங்களில் பூசுவார்கள். அதனால் ஸாதாரண பேய் ஒரு ஸமயம் விலகலாம். அஹங்காரப் பேய் அதற்கு மசியுமா? ஒரு நாளும் மசியாது. அவர்கள் மந்த மதிகள். மேதாவிகளாகிய பெரியோர்களோ வென்றால், தங்கள் குழந்தைகளுக்கு அஹங்காரப் பேய் பிடித்தால், உன்னுடைய தூள்களை ஸகல அங்கங்களிலும் வாரிவாரிப் பூசுகிறார்கள். கூடப் பிறந்த அஹங்காரப் பேய் பறந்தோடும்போது, நடுவில் வந்த சில்லரைப் பேய்கள் விலகும் என்பதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?] பாகவத பாததூளிக்கு இருக்கும் மஹிமை அளவற்றது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கக் காண் கிறோம்.

'உலகத்தில் மிகவும் தெரிந்த பரமேகாந்தியின் க்ருஹங்களில்கூட நவக்ரஹ சாந்திகளைச் செய்யாமல் இருப்பதில்லை' என்பதைத் தடுப்பதுபோல் விளங்கும் இவ்வழகிய ச்லோகத்தைப் பாருங்கள்.

" கநகருசிரா காவ்யாவ்யாதஸ்வநைர்ஜிதா
ஶ்ரீதமரப்யா ஹாஸ்வஸ்ரவா விஜாயிவஸேவிதா ।
விஹிதவிஹவா நித்யம் விஷ்ணோ: பதே மணிபாதுகே
ஸ்வமதி ஹதீவிஶேஷாம் நஸ்யஹா க்ருஹஸ்ஞஶ்ரீ ॥ "

இந்த ச்லோகத்தில் ஸ்வாமி, தங்கமயமாய் விளங்கும் பாதுகையைப் பார்த்துப் புகழ்ந்து போற்றுகிறார். இதில் ஒவ்வொரு பதத்திற்கும் இரண்டு

அர்த்தம் விளங்குவதைக் கவனியுங்கள். "ஓ தேவிபாதுகையே! நீ தங்க மயமாய் இருப்பதால் மிகவும் அழகாய் விளங்குகிறாய். ஸ்ரீமத் ராமாயணம் பாரதம் முதலிய காவ்யங்களால் புகழப்படுகிறாய். பெருமாளுக்கு உல்லாஸ ஸஞ்சாரத்தை அளிக்கிறாய். ஆசார்யர்களும் கவிகளும் உன்னைக் கொண்டாடு கிறார்கள். உன் திருமேனி ஸூர்யனைப்போல் ஜ்வலிக்கிறது. அந்தணர்கள் உன்னை ஆராதிக்கத் தவறுவதில்லை. ஸதா விஷ்ணுவின் திருவடித் தாமரையை விட்டுப் பிரியாமல் இருக்கிறாய்" என்பது ஒரு அர்த்தம். மற்றொரு கருத்து நவக்ரஹங்களைக் குறிக்கிறது. "அம்மா! பாதுகையே! அங்காரகன் உனக்கு நண்பன். அவன் உன்னுடன் ஸதா சேர்ந்திருக்கிறான். சுக்ரன் எப் பொழுதும் உன்னைத் துதிக்கிறான். சனி பகவானோ ஒருநாளும் உன்னை ஸேவிக்கத் தவறுவதில்லை. புதனும் குருவும் உன்னையே அடைக்கலமாய் அடைந் திருக்கின்றனர். ஸூர்யனால் உன் ப்ரபாவம் விளங்குகிறது. சந்த்ரனோ உன் திருவடிக் கீழ் வணங்கி நிற்கிறான். நீயோ ஆகாயத்தில் எப்போதும் வஸிக்கிறாய். நவக்ரஹங்கள் நீ இட்ட வழக்கா யிருக்கின்றன. ஆகையால் இவ்வுலகில் உன் திருவடித் தாமரைகளில் ஆச்ரயித்திருக்கும் எங்களுக்கு நவக்ரஹ பயமேது? ஸர்வ மங்களங்களையும் அருளும் சுப க்ரஹ மண்டலமாக வல்லவோ நீ விளங்கு கிறாய்!" என்கிறார். பாதுகா பக்தர்கள் நவக்ரஹ ஜபம் ஏன் செய்யவேண்டும்? பாதுகா க்ரந்த பாராயணமே ஸகல பீடைகளையும் விலக்கி, எல்லையற்ற மங் களங்களையும் அருளும் என்பதை வற்புறுத்திப் புகட்டி யிருப்பதைப் பாருங்கள்.

ஆம்; அத்யாச்சரயம்! இவ்வித காவ்ய ரத்நம், நமதாசார்ய ரத்நத்தைத் தவிர வேறு எவரால் அருளிச்செய்ய ஸாத்யம்? பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பர். ஒரு மரத்தில் பழுத்த ஒரு பழத்தைச் சுவைத்தால் போதாதோ? ஒவ்வொன்றும் விலையற்ற அநர்க்கமான மஹா மாணிக்கம். முன்பு ஸ்ரீராமா வதாரத்தில் பாதுகைகளின் ப்ரபாவம் ஸ்ரீ பரதாழ்வானால் ப்ரஸித்தி யடைந்தது. பாதுகா பக்திமான்களுள் அவர் முதன்மை பெற்றவர் என்று ஸ்வாமி ஆரம்பத்திலேயே அவரை வணங்கினார். பிறகு ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில், பாதுகை யின் ப்ரபாவம் சிறிது மங்கியது. அப்பொழுது ஸ்ரீ உத்தவர், பகவான் அநுக்ரஹித்த பாதுகைகளை சிரஸா தரித்துக்கொண்டு கண்ணனைப் பிரிய மன மின்றி, அவரை அடிக்கடி நமஸ்கரித்துப் பத்ரிகாச்ரமம் சென்றார். அவரால் பாதுகையின் மஹிமை நன்கு விளக்கப்பட்டது. அதன் பிறகு கலியின் மஹிமை தலையெடுத்து, ஸூர்யனை மேகம் மறைப்பதுபோல் அதை மறைத்தது. இன்று நம் கவிதார்க்கிக ஸிம்ஹம் அம்மேகங்களைச் சிதற அடித்து, அதன் ப்ரபையை உலகெங்கும் பரவச்செய்தார். அவருடைய கீர்த்தி ஆசந்த்ரார்க்கம் பத்துத் திக்கிலும் கொடி கட்டிப் பறக்கும் என்பதில் என்ன ஸந்தேஹம்? இத்தகைய ஆசார்ய தேவனைப் படைத்த நமது பாக்யமே பாக்யம். மாலுமி யற்ற கப்பல் ஓடுமோ? ஆசார்ய னற்ற வித்யை தக்குமோ? இவ்வித ஆசார்ய ரத்நம் அவதரிக்காவிடில் தர்மங்கள் ஓய்வடையுமே. துஷ்டர்கள் மலிவார்களே. ஜ்ஞாநம், பக்தி, வைராக்யம், க்ருபை, ஔதார்யம் முதலிய ஆத்மகுணங்கள், நமது கவிதார்க்கிக ஸிம்ஹத்தை அடைந்தல்லவோ பெருமை பெற்று விளங்குகின்றன என்று போற்றிப் புகழ்ந்து சென்றனர்.

"ஜயதி யதிராஜஸூக்திர் ஜயதி முகுந்தஸ்ய பாதுகாயுகளீ ।
ததுபயதநாஸ் த்ரிவேதீம் அவந்த்யயந்தோ ஜயந்தி புவி ஸந்த: ॥
"கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ॥"

ஸ்ரீ:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ப்ரம்ஹ வித்யா

[ஸ்ரீ. உப. மேல்மா - நரஸிம்ஹ தாதாசார்யர்]

நான் பூப்ரதக்ஷணம் செய்வதாக ஸங்கல்பித்துக்கொண்டு புறப்பட்டேன். ஒவ்வொரு தினம் ஒவ்வொரு க்ராமத்தில் இருந்து, அங்குள்ள விசேஷங்களை விசாரித்துத் தெரிந்துகொண்டு சுற்றிவந்தேன். ஒருநாள் மஹாவ்ருஷம் என்கிற தேசத்திலிருக்கும் ரைக்வபர்ண மென்கிற க்ராமத்திற்கு வந்தேன். அங்கு ரைக்வ ரென்கிற மஹா ப்ரஹ்மவித்தான மஹர்ஷி ஒரு வண்டியின் அருகில் அமர்ந்து, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைக் குறித்துத் தவம் செய்துக்கொண்டிருந்தார். அவருடைய தபோபலத்தைப்பற்றிச் சொல்ல ஆயிரம் நாப் படைத்த ஆதிசேஷனும் சக்தியற்றவன். ரைக்வரை நான் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவருடைய அநுக்ரஹத்தைப் பெற்று, அவ்வூரிலிருந்து நடந்து செல்லுகையில், ஜாநச்ருதி என்கிற மஹாராஜன், ஆயிரம் பசுக்கள், உயர்ந்த ஸ்வர்ணாபரணங்கள், நல்ல குதிரைகள் பூட்டிய தேர் முதலியவைகளுடனும், மற்றும் தன் பரிவாரங்களுடனும் வ்ருஷபர்ண க்ராமத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான். 'ஜாநச்ருதி எங்குச் செல்லுகின்றார்?' என்பதை அங்குள்ளவர்களைக் கேட்டேன். அவர்கள் பின் வருமாறு கூறினர்:—

ஜாநச்ருதி மஹாராஜர் வெகுகாலமாய்த் தம்முடைய தேசத்தில் பசி என்று ஒருவரும் வருந்தாவண்ணம் அநேக அந்ந ஸத்ரங்களைக் கட்டி, வர்ணாச்ரம க்ரமங்கள் தவறாதபடி எல்லோருக்கும் அந்நமிட்டுப் பூஜித்து வந்தார். இவருடைய அந்ந தான கீர்த்தி ஸ்வர்க்க லோகம் வரை வ்யாபித்திருக்கிறது. ஆனால் நேற்றிரவு ஜாநச்ருதிக்கு முன்பாக இரண்டு அன்னப் பறவைகள் தோன்றி, 'ப்ரம்ஹத்தை அறிந்து தவம்புரியும் ரைக்வருக்கு, கேவலம் புண்யசாலியான ஜாநச்ருதி நிகராகமாட்டார்' என்று சொல்லிப் போயின. பிறகு, ரைக்வரிடம் சென்று ப்ரம்ஹோபதேசம் பெற விரும்பிய மஹாராஜர், ரைக்வர் இருக்கும் இடத்தைத் தேடக் கட்டளையிட்டார். நாங்கள் தேடி ரைக்வர் இருப்பிடத்தை அறிந்துவந்தோம். 'ரைக்வருக்கு இந்தப் பசு முதலியவைகளை உபஹாரமாக ஸமர்ப்பித்து ப்ரம்ஹோபதேசத்தைப் பெறுவதற்கு ஜாநச்ருதி மஹாராஜர் செல்கிறார்; நாங்களும் ரைக்வரைத் தர்சித்துவரச் செல்கிறோம்' என்றார்கள்.

இதைக் கேட்டு நானும் அவர்களுடன் ரைக்வ பர்ணம் செல்லத் திரும்பினேன். மஹாராஜன் மிக்க வணக்கத்துடன் மஹர்ஷியைக் கிட்டித் தான் கொண்டுவந்த பசு முதலியவைகளை ஆசார்யோபஹாரமாக ஸமர்ப்பித்துவிட்டு, ரைக்வர், க்ரஹஸ்தாச்ரம தர்மத்தை அநுஷ்டிப்பதற்காகத் தமது பெண் ஸுசீலாவையும் கந்யகாதாநம் செய்து, கந்யகாதாந காலத்தில் ரைக்வர் வஸிக்கும் தேசத்தையும் பூதாநம்செய்து, மஹர்ஷியை சாஸ்த்ரத்தில் சொல்லிய மர்யாதைகளுடன் பூஜித்து, 'ஆசார்ய ச்ரேஷ்டரே! தேவரீர் தொழும் தெய்வத்தை அடியேனும்

தொழுது க்ருதார்த்தனாகும்படி உபதேசிக்கவேண்டும்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

மஹர்ஷி இதைக் கேட்டு ஸந்தோஷித்து, 'மஹாராஜனே ! ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன்தான் பரப்ரம்ஹம். அவனை உபாஸித்தால் நான் அடைந்ததுபோல் இவ்வுலகிலுள்ளபோது ஸகல போகங்களையும் அடைந்து, இனி நான் பெறப் போகும் ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்குப் பல்லாண்டு பாடிக் கொண்டு, கால தத்வ முள்ளவரையிலும் ஆநந்தத்தை அநுபவிப்பீர். என்னால் இன்று உனக்கு உபதேசிக்கப்பட்ட இந்த வித்யை 'ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ப்ரம்ஹ வித்யை' யென்றும் 'ஸம்வர்க்க வித்யை' என்றும் பெயருள்ளதாய், சாந்தோக்யோபநிஷத்தில் நான்காவது ப்ரபாடகத்தில் உலகத்தாருக்கு ஸ்பஷ்டமாய் விளங்கும். உனக்கு ஸகல மங்களங்களும் உண்டாகுக. போய்வருவாய்" என்று கூறி விடையளித்து ஜாநச்ருதியை அனுப்பினார். மஹாராஜனும் ஸந்தோஷத்துடன் நகரம் சென்று ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆராதித்து, இவ்வுலகில் ஸகல போகங்களையும் அநுபவித்து, ஸ்ரீ வைகுண்டத்தில் நம் சிங்கப்பிரானுக்குப் பல்லாண்டு பாடிக்கொண்டு ஆநந்தக் கடலில் அமர்ந்து கிடக்கிறார்.

பிறகு நான் பூப்ரதக்ஷிணம் செய்து முடித்துவிட்டுத் திரும்பி வரும்போது அம்மஹர்ஷியை ஸேவித்து, சிங்கவித்யையை உபதேசம் பெற்றேன். என் பூப்ரதக்ஷிணத்திற்கு இதுவே நல்ல பலன். இந்நாளே நமக்கு நன்னாள் என்று நினைத்து, அன்றுமுதல் நம் சிங்கனைச் சிந்தித்து ஸகல இஷ்ட ஸித்திகளையும் அடைந்து வருகிறேன். சிங்கப்பிரானின் செங்கமலக் கண் கடாக்ஷம் வீணாகுமா ?

ஸ்ரீ:

செய்திகள்

1

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபை, மதுராந்தகம்.

ஸ்ரீ அஹோபில மட ஸம்ஸ்க்ருத கலாசாலையில் மஹோத்ஸவம்

ஷை கலாசாலையின் ஆரம்ப காலம் முதல் ப்ரின்ஸ்பாலாக எழுந்தருளி யிருந்த வரும், ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபையை ஆரம்பித்து வைத்தவரும், நமது துரத்ருஷ்ட வசத்தால் பரமபதம் எழுந்தருளியவருமான ஸ்ரீ உப. கோஷ்டீபுரம் ஸௌம்ய நாராயண மஹா தேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம், 20-11-45 செவ்வாய்க்கிழமை யன்று ஷை ஸபையின் சார்பாக வித்யார்த்திகளால் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அச்சமயம் ஷை ஸங்கத்துக்கு இக்கலாசாலை ந்யாயாத்யாபகர் ஸ்ரீ. உப. நாராயணசார்ய ஸ்வாமி தலைமை வஹித்தார். ஸ்ரீ உப. கோஷ்டீபுரம் ஸ்வாமியின் திருவுருவப் படத்திற்கும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுருவப் படத்திற்கும் மாலை முதலிய ஸத்காரங்கள் செய்த பின்னர், அங்கு ப்ரஸங்நர்களாயிருந்த கலாசாலை அத்யாபகர்கள் முறையே பாதூர் ஸ்ரீ உப. ராகவா சாரியர், ஸ்ரீ உப. மேல்பாக்கம் நரஸிம்ஹாசாரியர், ஸ்ரீ உப. A. S. க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ உப. கோஷ்டீபுரம் வாஸுதேவாசாரியர் (ஸ்வாமி குமாரர்) முதலிய வித்வான்களால் ஸ்ரீ ஸ்வாமியின் அரிய குணங்களும் பாண்டித்யமும் அரும் பெருஞ் செயல்களும் புகழ்ந்து பேசப்பட்டன. அப்போது மற்ற அத்யாபகர்களும் இதர வித்வான்களும் ப்ரஸங்நமா யிருந்தனர். வித்யார்த்திகள் அனைவரும் ஸ்ரீ ஸ்வாமியின் குணாதிசயங்களைக் கேட்டு இன் புற்றனர். வித்யார்த்திகளுள் A. V. நரஸிம்ஹன், O. R. ராஜகோபாலன் இருவரும். ஸ்ரீ ஸ்வாமி பேரில் இயற்றப்பட்ட ச்லோகங்களைப் படித்தனர். K. G. ஸந்தாநகோபாலன் T. K. நரஸிம்ஹாசாரி என்னும் வித்யார்த்திகள் ஸ்ரீஸ்வாமியின் குணங்களைப் பற்றிப் பேசினர்கள். பின்பு தலைவர், ஸ்ரீஸ்வாமியின் குணங்களை நன்கு எடுத்துரைத்தார். பின்பு கார்யதர்சி S. வரதாசாரியால் தலைவருக்கும் அத்யாபகர்களுக்கும் வந்திருந்த இதர வித் வான்களுக்கும் வந்தநோபசாரம் கூறியபின், மங்கள கீதத்துடன் ஸபை இனிது கலைந்தது, ஆதியிலும் அந்தத்திலும் N. வெங்கட வராகனுடைய மங்கள கீதங்கள் போற்றத் தக்கன.

2

ஸ்ரீ அஹோபில மட ஸம்ஸ்க்ருத கலாசாலையின் ப்ரார்த்தநா மண்டபத்தில் ஷை ஸபை யின் கூட்டமானது 28-10-45 ஞாயிற்றுக்கிழமை யன்று, ஷை கலாசாலை வயாகரணாத் யாபகர் ஸ்ரீ. உப. பாதூர் ராகவாசாரிய ஸ்வாமி தலைமையில் கூடியது. அச்சமயம் வ்யாகரண சிரோமணி வித்யார்த்தியான A. V. நரஸிம்ஹன் என்பவர், "ஸநாதந தர்மத் தின் தற்கால நிலைமை" என்னும் விஷயம்பற்றி ஸம்ஸ்க்ருதத்தில் உபந்யஸித்தார். பின்பு தலைவரின் விரிவான உபந்யாஸத்துடன் மங்கள பூர்வகம் ஸபை இனிது கலைந்தது.

13-11-45 செவ்வாய்க்கிழமை யன்று, ஷை ஸபையின் கூட்டமானது ஷை கலா சாலையின் வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீ உப. மேல்பாக்கம் நரஸிம்ஹாசாரிய ஸ்வாமி தலைமை யில் கூடியது. அச்சமயம் வ்யாகரண சிரோமணி வித்யார்த்தியான M. K. ரங்காசாரி என்பவரால் 'ஜ்ஞாநகொஷிஹு-விஃ' என்னும் விஷயம் பற்றிப் பேசப்பட்டது. பிறகு தலைவரின் முடிவுரைக்குப் பிறகு கார்யதர்சியால் வந்தநோபசாரம் கூறப்பட்டவுடன் மங்களத்துடன் ஸபை இனிது கலைந்தது.

19-11-45 திங்கட்கிழமை திநம் ஷை ஸபையின் கூட்டமானது இக்கலாசாலை அத்யாபகர் ஸ்ரீ. உப. A. S. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி தலைமையில் நடந்தது. அப் பொழுது ப்ரவேச வகுப்பு வித்யார்த்தியான R. லக்ஷ்மீநாராயணன் என்னும் வித்யார்த்தி

யால், "கிம்கிம் நவாயயதிகருறுஷவவித்யா" என்னும் விஷயம் பற்றி உபந்யஸிக்கப் பட்டது. மற்ற வித்யார்த்திகளும் அவ்விஷயத்தை அநுஸரித்தும் கண்டித்தும் பேசினார் கள். பிறகு தலைவரின் முடிவுரையுடன் மங்கள பூர்வகமாய் ஸபை கலைந்தது.

காரியதர்சி S. வரதாசாரி.

3

திருப்பதியில் ஸூதாஸ்வாதினீ ஸபையின் ஒன்பதாவது வார்ஷிகோத்ஸவம்.

திருப்பதி ஸ்ரீவேதாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸூதாஸ்வாதினீ ஸபையின்ஒன்பதாவது வார்ஷிகோத்ஸவம் நடந்த 25-11-45 ஞாயிற்றுக்கிழமை யன்று, ஸ்ரீமான்சித்தூர் ஸ்ரீஉப. M. அநந்தசயநம் அய்யங்கார், [B.A. B.L., அட்வகேட் M.L.A. ஸென்டரல்] ஸ்வாமியின் தலைமையில் அதி விமர்சையாய் நடந்தது. அன்று காலை ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளை சப்ரத்தில் எழுந்தருளப்பண்ணி அலங்கரித்து; யானை முதலிய பரிஜந பரிச்சதங்களுட னும் பாராயண ஸ்தோத்ரபாட கோஷ்டியுடனும் ஸ்ரீஅஹோபில மடத்திலிருந்து மாடவீதி ப்ரதக்ஷிணம் வந்து, ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் அனைவரும் சென்றார்கள். சுமார் 200 ஸ்ரீவைஷ்ணவர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார்கள். ஸ்ரீமான் மீமாம்ஸார் ணவ மீமாம்ஸா கேஸரி பண்டிதராஜ, ஸ்ரீ உப. D. T. தாதாசாரிய ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீஸூக்தியின் பெருமையைப்பற்றி உபந்யஸித்தார். இந்த ஸ்வாமியின் உபந்யாஸத் தைப்பற்றி அறியாதவர் ஒருவரும் இலராதலின், இங்கு அதிகமாகச் சொல்லவேண்டிய அவசிய மில்லை. தீர்த்த விநியோகம் ஆனவுடன் கூட்டம் கலைந்தது. மாலை 2-மணிக்கு ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் ஷ்ஸபையின் வருஷாந்தரக் கொண்டாட்டம் ஆரம்ப மாயிற்று. ஸ்ரீM. அநந்தசயநம்அய்யங்கார் ஸ்வாமி தலைமை வஹித்தார். ஸ்த்ரீகள் உட்பட ஆஸ்திக மஹான்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள். V. V. ரங்கநாதன் (தமிழ் வித்வான்) என்பவன் மங்களம் பாடியபிறகு, வரவேற்புக் கமிட்டித் தலைவரான ஸ்ரீ உப. T. K. துரைஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி B.A. (வக்கீல்) ஸபையின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறித் தலைவருக்கும், மேற்படி உத்ஸவத்தைத் திறந்து வைப்பவரான ஸ்ரீ உப. D. ராம ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமிக்கும், ஸபையின் சார்பாகத் தமது வந்தநத்தைத் தெரிவித்தார் ஆஸ்திக சிகாமணியும் பகவதநுபவ ஸார்வபௌமருமான ஸ்ரீமான் D. ராமஸ்வாமி ஐயங் கார் ஸ்வாமி [B A., B.L. அட்வகேட் மதராஸ்] இவ்வுத்ஸவத்தைத் திறந்துவைத்து, சுமார் ஒன்றரை மணி காலம் 'ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயம்' என்னும் விஷயத்தைக்குறித்து, மிக்க அழ கிய நடையில் கேட்பவர்களுடைய மனம் பரவசமாகும் வண்ணம் உபந்யாஸம் செய் தருளினர். சுருங்கக் கூறின், அன்று அந்த ஸ்வாமி பகவத் பக்தி பாரவச்யத்தால் நெஞ் சுருகிக் கண்பனிப்ப நின்று கண்ணநீர் கைகளால் இறைத்துப் பேசிய பேச்சினிமை, கேட்பவர்களையும் அவர் நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. பிறகு, தலைவரான ஸ்ரீ M. அநந்தசயநம் அய்யங்கார்ஸ்வாமி 'தற்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் எவ்வாறு நடந்து கொண்டால் முன்னேறலாம்? ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயமும் தழைந்து வளரும்' என்பதைப் பற்றி அழகாய் ப்ரஸங்கித்தார். ஸ்ரீமான்கள் K. C. வரதாசாரிய ஸ்வாமி M. A. Phd., திருவரங்கம் ஸ்ரீநிவாஸராகவாசாரிய ஸ்வாமி, T. K. கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி M.A., தர்க்கார்ணவ பண்டித ரத்ந மீமாம்ஸா வல்லப உத்தமூர் வீரராகவாசாரிய ஸ்வாமி, கோழியாலம் சடகோபர்சாரிய ஸ்வாமி, சிறுங்கட்டூர் S. N. ஸ்ரீராமதேசிக சிரோமணி, இந்த ஸ்வாமிகளும் தேசிகன் வைபவத்தைக் குறித்து உபந்யாஸம் செய்தார்கள். ஸபாத்யக்ஷரான ஸ்ரீ D. T. தாதாசாரிய ஸ்வாமி, எல்லோருக்கும் வந்தநம் கூறியபின் கூட்டம் இனிது கலைந்தது. இரவு எட்டு மணிக்கு ஸ்ரீதேசிகன் ஆஸ்தாநம் கண்டருளும் பொழுது, சித்தூர் ராமாயணம் ஸ்ரீ T. ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி, "ஸ்ரீதேசிக வம்ச ப்ரபாவம்" என்னும் விஷயத்தைக் குறித்து வெகு அழகாய் உபந்யஸித்தார். உடனே ஸ்ரீ D. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, அங்கு ஸ்தோத்ரபாட பாடசாலை ஒன்று ஆரம்

பித்துவைத்து, ஸ்ரீதேசிகன் ஸ்தோத்ர ஜாலங்களின் பெருமையைக் குறித்துச் சிறிது உபந்யஸித்தார். விநியோகம் ஆனவுடன் கூட்டம் கலைந்தது. ஸ்தோத்ரபாட பாடசாலை ஸ்ரீ அஹோபில மடத்தில் தினந்தோறும் ஸாயங்கால வேளையில் நடந்துவருகிறது. சுமார் அறுபது சிறுவர்கள் கற்று வருகிறார்கள்.

திருப்பதி }
4-12-45. }

தேசிக பக்தன்.

4

ஒரு ப்ரஹ்மவித்தின் பரமபத ப்ராப்தி

ஸ்ரீமந் நாராயணனையே பரம ப்ராப்யமாகக் கொண்ட ஸ்ரீ வைஷ்ணவர்கள் நிறையப் பெற்ற தாம்ரபர்ணீ நதீ தீரத்தில், காருகுருச்சி என்னும் ஸ்ரீ க்ராமத்தில், ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தானத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்குப் பூர்வாச்ரமத்தில் மூன்றாவது திருக்குமாரராக அவதரித்து, இந்த லீலா விபூதியை 62 வர்ஷம் அலங்கரித்து விட்டு, நாளது பார்த்திவ வர்ஷம் கார்த்திகை மாஸம் க்ருஷ்ணபக்ஷம் பஞ்சமீ திதி கூடிய ஸ்திர வாஸரத்தில் ஸ்வாசார்யரான ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய க்ருபையால், ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடிகளில் நித்ய நிரவத்ய கைங்கர்யத்துக்குப் பாத்ரராய் அவனுடைய பாதாரவிந்தங்களை அடைந்து நித்ய விபூதியை அலங்கரித்தார். ஸ்ரீ ஸ்வாமியை ஆச்ரயித்தும் ஆச்ரயிக்கவுமிருந்த சாத்ர வர்க்கங்களுக்கும், சிரகால சுச்ருஷையைப் பண்ணவுமிருந்த புத்ர களத்ராதிகளுக்கும் ஸ்ரீஸ்வாமியின் பிரிவு ஆறாத் துயரம் அளிக்கின்றது.

ஸ்ரீஸ்வாமி, உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களைத் தமது பிதாவிடமிருந்தே செய்யப்பெற்று, வேதாந்தாதி சாஸ்த்ரங்களையும் அவரிடமிருந்தே அதிகரித்து, அவருடைய திருவடிகளிலேயே ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணத்தைப் பண்ணி, அநேக சிஷ்யவர்க்கங்களுக்குக் காலக்ஷேபாதிகளை ஸாதித்துக்கொண்டு, ஸம்பத்துக்களுள் ஒன்றும் குறைவின்றி எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ ஸ்வாமியின் சரமச்லோகம்

கல்யே வ்ருஷே வ்ருஷ்டிமுபேதே க்ருஷ்ணே பஞ்சம்யாம் திதௌ
ஸௌரே ...
ஸ்ரீ ...
...

பந்தல்குடி ரா. வேலாமூர். ஸ்ரீநிவாஸதாஸன்.

5

பண்ருட்டி ஸ்ரீ மஹாராதநம்.

நிகழும் பார்த்திவ ஞு தைமீ 17உக்குச் சரியான 1946ஞு ஜனவரிமீ 30உ புதன்கிழமை க்ருஷ்ண பக்ஷம் த்ரயோதசி திதியில் ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தானத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் ஜகத் விக்யாத கீர்த்தியுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய 23-வது வார்ஷிக மஹாராதன மஹோத்ஸவம் வழக்கப்படி பண்ணுருட்டி அக்ரஹாரத்தில் நடக்கின்றது. அதற்காக நாளது தைமீ 15உ (28—1—46) திங்கட் கிழமை காலையில் வேதபாராயண அத்யாபகங்கள் உபக்ரமிக்கப்பட்டு மூன்றாவது நாளில் வீதி உத்ஸவம், சாத்துமுறை முதலிய மஹோத்ஸவங்கள் நடத்துகிறபடியால், அதற்கு ஸ்வாமிகள் அனைவரும் முன்னமேயே எழுந்தருளி ஸ்ரீ அழகிய சிங்கர் கைங்கர்யத்தைப் பூர்த்திபண்ணி க்ருதார்த்தராவதுடன், மஹான்களால் நடத்தப்படும் உபந்யாஸங்களையும் திருச்செவி ... ஆநந்திக்கும்படி ப்ரார்த்திக்கின்றோம்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் யாத்ரோத்ஸவம்.

ஸ்ரீ அழகிய சிங்கர் ஹைதராபாத்திலேயே இன்னும் எழுந்தருளியிருப்பதாக அறிகிறோம். இப்பொழுது அவ்விடத்திலிருக்கும் ஸந்தர்ப்பங்களைப் பார்க்குங்கால் இந்த மாஸம் முழுவதும் அவ்விடத்திலேயே எழுந்தருளியிருக்கும்படி ஸம்பவிக்கலாமென்று தோன்றுகிறது. அப்படி ஸம்பவித்தால் ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்ஸும் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் அவ்விடத்திலேயே நடைபெறலாம். தை மாஸத்திற்குப் பிறகு உத்தரதேஶ யாத்ரையைப்பற்றி நிர்ணயம் செய்யப்படும். ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள்ளம், பதரிகாச்ரமம் பர்யந்தம் எழுந்தருளவேண்டுமென்பதே; ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அந்த மநோரதத்தைத் தலைக்கட்டி வைக்கவேண்டும்.

* * * *

ப்ராஹ்மண ஸேவா ஸங்கம்.

சேலம் நகரத்திலுள்ள திவான் பஹதூர் ஸ்ரீமான் ஆர். வி. க்ருஷ்ணய்யர் முதலிய சில ஆஸ்திகாக்ரேஸரர்கள் "ப்ராஹ்மண ஸேவா ஸங்கம்" என்னும் பெயருடன் ஒரு ப்ராஹ்மண ஸங்கத்தை ஏற்படுத்தப் போகிறார்களென்று நாம் அறிகிறோம். இப்பொழுது ப்ராஹ்மண ஸமூஹத்திற்குக் கோரமான துர்த்தசை ஸம்பவித்திருப்பதைப் பார்த்து, அதை ஒருவாறு கொஞ்சம் ஶமனம் செய்துகொள்ளலாமா வென்றும், அப்படி ப்ரயத்நப்படுவது உசிதமானால் தமது இஷ்டத்தை ஸாதித்துக்கொள்வதற்கு எவ்விதமான உபாயங்களைக் கைப்பற்றலாமென்றும் ஆலோசிப்பதற்கும் அந்த உபாயங்களை நிர்த்துஷ்டமான மார்க்கத்தில் ப்ரயோகிப்பதற்குமாகவே இந்த ஸங்கத்தை நிர்மாணம் செய்கிறார்களாம். இந்த ஸங்கத்தை ஏற்படுத்துவதற்குப் பூர்வாங்கமாக, நிகழும் ஜனவரி மாஸக் கடைசியில் பெரியதொரு ஸதஸ் நடத்தலாமென்று அவர்கள் ஆலோசித்திருப்பதாகத் தெரியவருகிறது. அதற்கு ஆஹ்வாந பத்ரிகைகளும் பஹுவாக அனுப்பப்பட்டிருக்கின்றனவாம். ஸ்ரீ ஸந்நிதிக்கும் ஒரு பத்ரிகை கிடைத்திருக்கிறது. ஸ்ரீ அழகியசிங்கரும் அதைத் திருவுள்ளம்பற்றிப் பூர்வாங்க ஸங்கத்திற்கு ஸ்ரீ ஸந்நிதியிலிருந்த வித்வான்களை அனுப்பும்படியாக ...கமென்று நாம் நம்புகிறோம்.

இங்க்லீஷ்காரர்கள் நமது தேஶத்திற்கு வந்து ராஜ்யபாரத்தை ஏற்றுக் கொண்டது முதல், ஸ்வல்பகாலம் முன் பர்யந்தம் ராஜாங்கத்தார் ராஜ்ய தந்த்ர நிர்வாஹத்தில் தமக்கு அபேக்ஷிதர்களான குமாஸ்தா முதலிய பரிஜநங்களை எவ் வித ஜாதிபேதத்தையும் பாராமல் கேவலம் யோக்யதையை மாத்ரம் பார்த்து நிய மநம் செய்து வந்தார்கள். இந்த வ்யவஸ்தையில் பக்ஷபாத மொன்று மிராமல் இருந்ததால், படிப்பும் திறமையும் வாய்ந்தவர்க ளெல்லாருக்கும் அவரவர்கள் யோக்யதைக்குத் தக்கவாறு ஆஸ்பதங்கள் கிடைத்து வந்தன. இப்பொழுது பத்துப் பதினைந்து வருஷங்களாகச் சில நிர்ப்பந்தங்கள் நேரவே, ராஜாங்கத்தார் பரிஜநங்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் ஜாதி பேதத்தைப் பார்த்து அந்தந்த ஜாதியைச் சேர்ந்தவர்களின் ஸங்க்யைக்கு அநுகுணமாக வேலைகளைக் கொடுக்க வேண்டுமென்னும் நியம மொன்றைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ப்ராஹ்மணர் களின் ஸங்க்யை மற்றை ஜாதியர்களின் ஸங்க்யையைக்காட்டிலும் மிகவும் குறை வாக இருக்கிறபடியால், ப்ராஹ்மண ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்க இலாகாவில் வேலை கிடைப்பது அரிதாகிவிட்டது. ஆங்கிலம் படித்தால் வேலை கிடைக்குமென்னும் எண்ணத்துடன் அந்தப் படிப்பில் இழிந்து, அந்த ப்ரயத் நத்தில் ஏராளமான த்ரவ்யத்தைச் செலவிட்டு கணக்கற்ற குடும்பங்கள் இப் போது வ்ருத்தி ஹீநர்களாகக் கஷ்டப் படுவதை எல்லாரும் பார்க்கலாம். இது நிற்க, ஜந்மாந்தர பாபத்தின் பலமாகவோ: வேறு காரணத்தாலோ, ப்ராஹ்மணர் கள் மீது மற்றை ஜாதீயர்கள் ஒருவிதமான த்வேஷம் கொண்டு கூட்டம் கூடி ப்ராஹ்மணர்களை நிந்திப்பதிலும் தங்களுடைய ஶக்திக்குத் தகுந்த அளவு அவர் களுக்குத் தீங்கை விளைவிப்பதிலும் கங்கணம் கட்டிக்கொண்டு ப்ரவர்த்தித்திருக் கிறார்கள். ஒருவர் இருவர் எவ்விடத்திலாவது இம்மாதிரி ப்ரவர்த்தித்திருந்தார் களேயானால், அதைப் பெரியதொரு கஷ்டமாகப் பாராட்டாமல், அது கால க்ர மத்தில் ஸ்வயமாகவே ஶமநம் ஆகிவிடுமென்று பொறுத்துப் போகலாம். அப்படி இராமல் அநேகம் பெயர்கள் சேர்ந்து இடைவிடாமல் அஸாதுவான இந்த மநோபாவத்தை மற்றோர்களுடைய மநஸ்ஸிலும் ஜநிப்பிந்துக்கொண்டு வருகிறபடியால், இதைத் தடுக்க முயல்வது அவச்யமாகின்றது. இந்தக் கார ணத்தால் நாம் இந்த ஸங்கத்தின் நிர்மாணத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

ஆனால், இதன் நிர்மாணம் நமக்கு ஸமக்ரம் ஆநுகூல்யத்தையே ஸாதிக்கு மோ என்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கக்கூடும். ஏற்கெனவே நம்மிடம் த்வேஷம் பாராட்டிக்கொண்டிருப்பவர்கள் இப்பொழுது அதைத் தடுப்பதற்கு நாம் ப்ரயத் நப்படுவதைப் பார்த்து இன்னும் தீவ்ரதரமான த்வேஷத்தைச் செய்து அதுவழி யாக நமக்கு அதிக கெடுதலைச் செய்ய முயல்வார்க ளன்றோ? அதைத் தடுப்ப தற்கு என்ன உபாயத்தைக் கைப்பற்றலாமென்பதை நாம் தீர்க்கமாக ஆலோ சிக்கவேண்டும். நமக்கு எட்டின வரையில் ஒரே உபாயம் அதற்கு யுக்தமென்று தோன்றுகிறது. அது என்னவென்றால்: ப்ராஹ்மணர்களுடைய நன்மைக்கென் றே நமது ஸங்கத்தை நடத்தாமல் ஜகத்தின் நன்மையைக் கோரி எல்லா ஜநங்களை யும் நமது ஸ[illegible]ஹ்ருத்தாகவே பா[illegible]து, நமது ப்ரயத்நத்தால் எல்லாருக்கும் [illegible]

நன்மையைச் செய்ய முயல்வதே என்பதுதான். அவ்விதம் நாம் ஹார்த்தமாக முயன்றால், அவர்களுடைய த்வேஷம் ஸ்வயமே ஶாந்தி அடைந்துவிடலாம். நாம் அவர்களுக்கு ஹிம்ஸையைச் செய்துகொண்டு, அது வழியாக நமது க்ஷேமத்தைத் தேடிக்கொள்ள ப்ரயத்நப் பட்டாலன்றோ அவர்களுக்கு நமது மீது த்வேஷம் ஜநிக்கும்?

"யத்த்ரவ்யம் பாந்தவாநாம் வா மித்ராணாம் வா க்ஷயே பவேத் ।
நாஹம் தத் ப்ரதிக்ருஹ்ணீயாம் பக்ஷ்யாந் விஷக்ருதாநிவ ॥"-

[பந்துக்களுடைய நாஶத்தாலோ அல்லது மித்ரர்களுடைய நாஶத்தாலோ எந்தத் தநம் வருகின்றதோ, அந்தத் தநத்தை விஷம் கலந்த பக்ஷ்யம் போல் தூர விலக்கி விடுவேன்]என்று சக்ரவர்த்தித் திருமகன் விளக்கியிருக்கும் வழியில் நாம் சென்றால், நம்மிடத்தில் எவன் த்வேஷம் பாராட்டுவான்? ஆகையால் ப்ராஹ்மண ஸேவைக்கென்று ஒரு ஸங்கத்தை ஏற்படுத்தின போதிலும், அதை ஜகத்திலுள்ள ஸகல ப்ராணி வர்க்கத்தின் க்ஷேமத்திற்காக ப்ரயோஜநப்படுத்தி வரவேண்டுமென்பதை நாம் நமது ஸுஹ்ருத்துக்களுக்கு வற்புறுத்துவோம். நமது அத்யாத்ம ஶாஸ்த்ரங்களும் ஸர்வபூத ஸௌஹார்த்தத்தையே ஆத்ம ச்ரேயஸ்ஸுக்கு அடிப்படையாக உபதேஶிக்கின்றன. "லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகிநோ பவந்து" "ஸர்வஸ்ய ஸுஹ்ருதம் விஶ்வஸ்ய" என்பவைகளே நமக்கு வழிகாட்டும் வாக்யங்களாக இருத்தல்வேண்டும்.

* * * *

சென்ற மாஸத்து ஸஞ்சிகையில், சிலப் பெரியோர்கள் நமது ஶாஸ்த்ர வாக்யங்களுக்கு அஸங்கதமான அர்த்தத்தைச் செய்துகொண்டு, அந்த வாக்யங்களைத் தமது புத்திக்கு தோன்றும் சில புதிய நிர்ணயங்களுக்கு ஸாதகமாக உதாஹரித்து வருகிறார்களென்று நாம் வருந்தி எழுதியிருந்தோம்.

புதிய அலேபகர்கள்.

அவர்கள் ஸாமாந்ய ஜநங்களல்ல; படிப்பாலும் புத்திஶக்தியாலும் சிறந்தவர்கள்; ஜந்மாந்தர ஸுக்ருத விஶேஷமடியாக நமது வேதாந்த ஶாஸ்த்ரத்தில் ஒருவித விச்வாஸமும் அவர்களுக்கு உண்டு. ஆனால், ஶாஸ்த்ரம் சொல்லும் விஷயங்களெல்லாவற்றையும் அவர்கள் ப்ரமாணமாக அங்கீகரிக்க இஷ்டமில்லாதவர்களானதால், ஒரு அம்ஶத்தில் அதை அங்கீகரித்தும் மற்றொரு அம்ஶத்தில் அதை நிராகரித்தும் வருகிறார்கள். முக்யமாக அவர்களுக்குக் கர்மாநுஷ்டாந நிர்ப்பந்தங்கள் ருசிக்கவில்லை ஆகையால் அவைகளைப்பற்றி பேசும் வாக்யங்களெல்லாவற்றையும் அவர்கள் அநாதரிக்கிறார்கள். அலேபகர்கள் போலத் தம்மை ப்ரஹ்மஜ்ஞாநிகளாக நினைத்துத் தம்மைப் பாபம் ஒட்டாதென்றும் தமக்கு யுக்தமாகத் தோன்றுவதே ப்ரமாணமென்றும் கொண்டாடுகிறார்கள். அவர்களுட் சிலருக்கு ஸம்ஸ்க்ருத ஜ்ஞாநமுமுண்டு. அதை அவலம்பித்து அவர்கள் அநேக வாக்யங்களுக்கு அஸம்பத்தமாக அர்த்தம் சொல்வதைப் பார்த்தால் "ஸ்வமதி ... தாசெஷொ ... வ தநி ... " [ஸ்வல்ப ஜ்ஞாநத்தை வைத்துக்[illegible]டு உரை எழுதுமவர்களைக் கண்

டால் வேதம் பயப்படுகின்றது] என்று சொல்வது கேவலம் சாடு வாக்ய மன்று என்றே தோன்றும். நம்மை ஶாஸநம் செய்து நம்மை நல்வழியிற் செலுத்துவதற்காக ஏற்பட்டிருக்கும் ஶாஸ்த்ரத்தை நாம் ஶாஸநம் செய்ய ஆரம்பித்ததால் அப்புறம் வ்யவஸ்தை ஏது? "ஶாஸ்த்ரம் ந ஶாஸநீயம் யதி பவதி ததா ஸம்ஶயோச்சேதோ யஸ்மாத்"

இதற்கு ஒரு நிதர்ஶநமாகச் சென்ற ஸஞ்சிகையில் நாம் ப்ரஸ்தாவித்திருந்த "யதேச்சஸி ததா குரு" என்னும் வாக்யத்திற்கு அவர்கள் விவரிக்கும் உரையைப் பரிஶீலித்துப் பார்ப்போம். ஸ்ரீ கீதையை உபதேஶம் செய்த ஸ்ரீக்ருஷ்ணன் தனது உபதேஶத்தை முடிக்குமிடத்தில், 'அர்ஜுந! நான் செய்யவேண்டிய உபதேஶம் முடிந்துவிட்டது. அதை நீ பரிஶீலித்துப் பார்த்து உன்னுடைய புத்திக்கு எது யுக்தமாகத் தோன்றுகிறதோ அதைச்செய்' என்னும் அர்த்தமுள்ள "யதேச்சஸி ததாகுரு" என்னும் வாக்யத்தைக் கூறுகிறார். இதற்கு அவர்கள் சொல்லும் கருத்தாவது:— 'நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். நான் சொல்லிவிட்டேனென்று மாத்ரம் என் உபதேஶத்தைக் கைப்பற்றாதே. எல்லா விஷயங்களிலும் நமது புத்தியின் தோற்றமே பரம ப்ரமாணமானதால், உன் புத்தியை இதில் செலுத்தி அதன் நிர்ணயப்படி நீ அநுஷ்டிக்கலாம்' என்பதுதான். இந்தக் கருத்து உபபந்நமாகுமா? பதினெட்டு அத்யாயங்களால் புதிதான அத்யாத்ம ஶாஸ்த்ரார்த்தத்தை உபதேஶித்து, கர்ம நிஷ்டை முதலிய நிஷ்டாத்ரயத்தைப்பற்றி விவரித்துப் பேசி, ஆங்காங்கு 'ஸ்வஸ்வ தர்மங்களென்று சில தர்மங்கள் உண்டு, அவைகளை அவச்யம் அநுஷ்டித்தல்வேண்டும்' என்று பஹுப்ரகாரமாக விதித்துவிட்டுக் கடைசியில், 'நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன்; உனக்குத் தோன்றுவதை நீ செய்' என்று முடிக்கிறார் என்று சொல்வது ஸங்கதமாகுமா? கிறக, 'என்னிடம் பக்திசெய்; நிச்சயம் என்னை நீ அடைவாய்' என்றும் 'ஶோகம் வேண்டாம்' என்றும் சொல்லப்படப் போகிற மேல் வரும் வாக்யங்கள் இந்தக் கருத்துக்கு ஒத்தவையாகுமா? அர்ஜுநனிடம் ஸ்ரீக்ருஷ்ணனுக்குள்ள அந்யாத்ருஶமான ப்ரீதி விஶேஷத்தை இந்த வாக்யங்கள் ஸூசிப்பிக்கின்றனவன்றோ? ஆகையால் இவர்கள் சொல்லும் கருத்து இந்த வாக்யத்திற்கு உபபந்நமாகமாட்டாது. உபபந்நமான கருத்துத்தான் எதுவென்று கேட்டால், நமது ஆசார்யர்களால் விவரிக்கப்பட் டிருப்பதே உபபந்நம் என்று சொல்வதே உசிதமாகும்.

"இதி தே ஜ்ஞாநமாக்யாதம் குஹ்யாத்குஹ்யதரம் மயா ।
விம்ருஶ்யைததஶேஷேண யதேச்சஸி ததா குரு ॥"

என்பது ப்ரஸ்துத வாக்யம் இருக்கும் ச்லோகம். இதன் அர்த்தமாவது, 'இவ்வாறு முமுக்ஷுக்களால் அவச்யம் அறியப்படவேண்டியதான ஜ்ஞாநம் முழுவதையும் அவரவர்களுடைய அதிகாரத்திற்கு அநுரூபமாக உபதேஶித்துவிட்டேன். நீ உன்னுடைய அதிகாரம் எது என்பதைத் தீர்க்கமாக விசாரித்து எந்த உபாயம் உனக்குத் தகுந்தது என்று உனக்குத் தோன்றுகிறதோ அதைக் கைப்பற்று' என்பதுதான். அர்ஜுநன் ஸ்நேஹத்தாலும் காருண்யத்தாலும் மநஸ் ஆகுலமாகி யுத்தம் செய்வதில் அவன் நோக்கமில்லாதவனாய் இருந்தான்.

ர்மயோகம் ஜ்ஞாநயோகம் இவைகளின்ப்ரஸ்தாவம் வந்தவுடன் "தத்கிம் கர்மணி வோரெ மாம் நியோஜயஸி கேஶவ" [நான் ஜ்ஞாநயோகத்திலேயே ப்ரவர்த்திக்கிறேன். கோரமான இந்தக் கர்மாநுஷ்டாநத்தில் என் நீ என்னையோஜிக்கிறாய்?] என்றுகேட்டுக்கொண்டான். அதற்குஸ்ரீக்ருஷ்ணபகவான் "லோகேஸ்மிந் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா மயாநக" [அர்ஜுந! இந்த லோகத்தில், முமுக்ஷுக்களுக்கு கர்மநிஷ்டையென்றும் ஜ்ஞாநநிஷ்டையென்றும் இரண்டு வித நிஷ்டைகள் உண்டு; அவைகளுக்கு அதிகாரிகள் வெவ்வேறு. மோக்ஷேச்சைவந்த மாத்ரத்தால் ஜ்ஞாந நிஷ்டைக்கு அதிகாரம் வந்துவிட மாட்டாது. அவ்யாகுல சித்தனை உடையவனே ஜ்ஞாந நிஷ்டைக்கு அதிகாரியாவான். உன்னுடைய சித்தம் வ்யாகுலமாக இருக்கிறபடியால் நீ கர்மயோகத்தையே செய்யவேண்டும்] என்று பதில் அநுக்ரஹித்துவிட்டுப் பிறகு பஹுப்ரகாரமாக அந்த நிஷ்டை இரண்டையும் விவரித்துப் பேசி, பிறகு பக்தியோகத்தையும் உபதேஶித்து, கடைசியாக "இந்த மூன்று நிஷ்டைகளிலும் நித்யநைமித்திகங்களாகிற வர்ணச்ரமாநுபந்தி கர்மங்களெல்லாம் அவச்யம் வேண்டும். ஆகையால் அந்தந்த அதிகாரத்திக்கு அநுரூபமாக உபதேஶம் செய்யப்பட்டுள்ள ஶாஸ்த்ரார்த்த பர்வங்களில் புத்திமத்தரான இருக்கும் நீ கர்மம் ஜ்ஞாநம் பக்தி ஆக இவைகளுள் இப்பொழுது உனக்குக் கர்மயோகத்தில்தான் அதிகாரமென்று அறிந்து அந்தப் பர்வாவில் உன்னுடைய வர்ணத்திற்கும் ஆச்ரமத்திற்கும் தகுந்த தர்மத்தைப் பரிக்ரஹித்து வர்த்தித்து வா" என்று இந்த ச்லோகத்தால் நிகமநம் செய்கிறார். இது தான் "யஜ்ஞேஷ்வபி ததாகுரு" என்பதன் அபிப்ராயம். இம்மாதிரி இன்னும் பலவிடங்களில் விபரீதார்த்தம் செய்வதை எடுத்து உரைக்கலாம். (விஸ்தரபயத்தால் இதனுடன் விரதாகிறோம்.)

* * * *

ஸ்ரீ அழகிய சிங்கரின் நெஞ்சமே நீணகராகக்கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ சிங்கப்பிரான் சீரருளால் சிறந்துவிளங்கும் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகைக்கு

ஸ்ரீ ந்ரு. ப்ரியா விஷயமான ஒரு விஜ்ஞாபநம்.

இப்போது 4-ஆண்டுகள் பூர்த்தியாகி 5-வது ஆண்டு தொடக்கமாகிறது. யுத்தத்தின் விளைவால் அநேக பொருள்கட்குப் பஞ்சம் வந்ததுபோல் காகிதத்துக்கும் பஞ்சம் வந்தமையால், நமது ப்ரியை இடையில் மிக மெலிந்தே வெளிப்பட்டு வந்தது. ஸ்ரீ ஶரண்யனுடைய அநுக்ரஹத்தால் ஸமீபமாய் 3, 4, மாஸங்களாகச்சிறிது சிறிதாக அது அபிவ்ருத்தமாய்க்கொண்டு வருவதை நமது ஸுஹ்ருத்துக்கள் அறிவார்கள். ஆதலின், நமது ஸுஹ்ருத்துக்களான சந்தாதாரர்கள் யாவரும் க்ருபை பண்ணி முன்போல் 1946-ம்௵ ஜனவரி௴ முதல் ரூ. 3—0—0 சந்தாத்தொகை செலுத்தி உதவவேணுமாய் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். சென்ற ஸஞ்சிகையிலும் இவ் விஷயத்தைச் சிறிது விஜ்ஞாபித்திருந்தோம். நிற்க: 1945-ம் ஆண்டுக்கு இதுவரை சந்தாப் பணம் (ரூ. 2) செலுத்தாத சந்தாதாரர்கள் இந்த ஜனவரி மாஸத்துக்குள்ளேனும் க்ருபைபண்ணி அத்தொகையை அனுப்பி உதவினால் பரமோபகாரமாயிருக்கும் என்பதை ஜ்ஞாபிக்கிறோம்.

1945-டிசம்பர் மீத்திய ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சந்தா [illegible]ல்

22	M. R. ஆராவமுத அய்யங்கார், பம்பாய்	5	0
32	P. S. திருமலே, விருதுநகர்	2	0
57	N. R, கிருஷ்ணசாமி அய்யங்கார், மதுரை	2	0
95	A. S. சௌமிநாராயண சாரியார், ஸ்ரீரங்கம்	2	0
100	K. T. சுந்தராச்சாரியர், காரைகுறிச்சி	3	0
105	வரத ரகுநாதாசாரியார், திருவத்திபுரம்	2	0
158	V. R. கிருஷ்ணசாமி அய்யங்கார், கேதாண்டாப்பட்டி	3	0
173	N. கோபால அய்யங்கார், பரமக்குடி	5	0
191	V. K. கோதண்டராமன், வடுவூர்	5	0
201	V K. பார்த்தசாதி, திருவல்லிக்கேணி	2	0
213	தேசிகன், பெரியகுளம்	4	0
222	K குப்புசாமி அய்யங்கார், ஆடுதுரை	2	0
229	P, S. தேசிகாச்சாரியார், மன்னார்குடி	2	0
239	T. R. வெங்கடாச்சாரியார், புதுக்கோட்டை	2	0
253	K. ஸ்ரீனிவாசராகவ அய்யங்கார், கோவில்வெண்ணி	2	0
281	E. M. நரசிம்மாச்சாரியார், திருவள்ளூர்	2	0
290	T. ராஜகோபால அய்யங்கார், திருவழுந்தூர்	4	0
357	K. கோபலசாமி அய்யங்கார், திருவடமருதூர்	5	0
421	D. சுந்தரராஜ அய்யங்கார், பன்ருட்டி	2	0
422	E. R. சக்ரபாணி அய்யங்கார், ஏனாத்திமங்கலம்	[illegible]	0
424	குப்புசாமி அய்யங்கார், ஏமாப்பூர்	[illegible]	[illegible]
442	K. நரசிம்மாச்சாரியார், கோவலவள்னி	2	0
448	S. ஆள்வார் அய்யங்கார், திருநெல்வேலி	2	[illegible]
463	A. நரசிம்மாச்சாரியார், மதுங்கா	5	0
579	A. கிருஷ்ணசாமி அய்யங்கார், ஸ்ரீரங்கராஜபுரம்	2	0
592	செல்லம் அய்யங்கார், மாயனூர்	3	0
644	U. சக்ரவர்த்தி ராஜம்மாள், பனப்பாக்கம் அவளூர்	2	0
645	M. ஸ்ரீநிவாச அய்யங்கார், தண்டரை	2	0
649	A. V. வானமாமலே ஆச்சாரியார், திருவனந்தபுரம்	2	0
689	தென்மரை ஸாபம் ராஜகோபாலாச்சாரியார், மன்னார்குடி	3	0

சந்தாதாரர்கட்கு ஒரு விண்ணப்பம்

பலர் இன்னும் 1945 ஞு சந்தாப் பணத்தைச் செலுத்தாதிருக்கின்றனர். அந்தந்த வர்ஷத்துச் சந்தாப் பணம் அந்தந்த வர்ஷத்தில் செலுத்தப்பட்டு விடுதல் இருதிறத்தார்க்கும் அநுகூல மென்பது யாவரும் அறிந்த தொன்று. ஆதலின், இதுவரை இவ் வர்ஷத்துச் சந்தாத் தொகையைச் செலுத்தாத சந்தாதாரர்கள், நாளே ஜனவரி மாஸ [illegible]ளேனும் தமது சந்தாத் தொகையை க்ருபையுடன் செலுத்தி உதவும்படி ப்ரார்த்தி[illegible]ப்.

[குறிப்பு] பணம் அனுப்பும் சந்தாதாரர்கள், தாங்கள் பணம் அனுப்பும்போது, தங்கள் சந்தா நம்பரையும் மணியார்டர் கூ[illegible]னில் தயைசெய்து குறித்தனுப்ப வேண்டுகிறோம்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிட்டப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை.	மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0—2—0	1—0—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் („)	0—8—0	0–12—0
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0—2—0
6.	ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7.	ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8.	ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் :—

"மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், **சென்னை."**

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasa[illegible]aradachariar,
at Sri Sudarsana P[illegible]et, Little Conjeeveram.
[illegible] by S. V[illegible] St., Tyagarayanagar, [illegible]adras.